1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 31-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## "பிதாவே இவர்களை..."

இரைந்துஎழும் கடலலைபோல எனஉள்ளத்திலும் உணர்ச்சி அலைகள் உயர்ந்தெழுந்து உருண்டோடிக்கொண்டிருந்தன. என்றும்அமைதிநிறைந்த என்நெஞ்சில் அன்று அமைதியின்மை ஆர்ப்பரித்தது. என் இதயவானில் முனிவும் துயரும் முழங்கின. அமைதிகாண என் இல்லம்விடுத்துக் கடற்கரையை நாடி நடந்தேன். என்உள்ளத்திற்கொப்ப அமைதியற்றகடலருகில் அமைதிகாண எண்ணினேன்போலும்! அங்கு இள மணல்மேல் அமர்ந்தேன். யான் உள்ளுருகும் காரணத்தை எண்ணினேன். நேற்றுக் கதிரவன்சாயும்வேளை அந்தக்கருஞ்சட்டை 'வீரன்' கடவுளைப் பழித்து நகையாடினன். "இறைவன் ஒருவர் உண்டென்றால் இப்போதே, இவ்விடத்தே என்னைத்தண்டிக்கட்டும்; என் உடலை அணுஅணுவாக, துண்டு துண்டாகச் சிதறச்செய்யட்டும்" என்று 'சவால்' விட்டான். அவன் சொன்னபடி ஒன்றும் நடைபெறவில்லை. உடனே "இறைவன் இல்லை" என்று முகிலொலிபோல் முழங்கினன். இவ்வெண்ணந்தான் என் உள்ளத்தை வருத்தியது. அவனை அவ்விடத்தே அழிக்கவேண்டாமா என்று இறைவனை நான் இறைஞ்சிக்கேட்டேன்.

இதைஎண்ணிக்கொண்டிருந்தபோது இன்னொரு நிகழ்ச்சியைப் பற்றியநினைவு என்னுள்ளத்தில் மின்னலைப்போல் வந்தது. அது உலகம்போற்றும் உயர்கவிஞர் ஜோர்ஜ்பெர்னார்ட் ஷோவின் வாழ்க்கையில்நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சியாகும். ஒருநாள் அவர் தனதுநண்பர் குழாத்திடையே அன்பளாவிப் பேசிக்கொண்டிருக்குங்கால், இறைவன் இருக்கிறாரா என்ற பிரச்சினை எழுந்தது. அந்த அறிஞர் தனதுகடிகாரத்தை மேசையில் வைத்து "இறைவன் ஒருவர் உண்மையாகவே உள்ளார் என்றால் இக்கடிகாரத்தை ஒரு நிமிடம் நிறுத்திவைக்கட்டும்" என்று அறைகூவினர். கடியாரம் நிற்கவேயில்லை. அது ஓடிக்கொண்டேயிருந்தது. உடனே "இறைவன் இல்லை" என்று இறுமாந்து இயம்பினர் கவிஞர் ஷோ.

முன்னொருநாள் ஓர் பிரான்சியகவிஞன் இறைவனை இகழ்ந்து கவிதைகள் இயற்றினன். இறுதியில் இறைவனின் இல்லம் நுழைந்து முழங்காலிலிருந்து "நீர் திவ்விய நற்கருணையில் இருப்பது உண்மையானால் இதோ வானிலிருந்து பேரிடி விழச்செய்து என்னை அழித்துவிடும்" என்று கேலியாகக் கேட்டான். அவன் கேட்டபடி நடைபெறவில்லை. இன்றும் எத்தனையோ இடங்களில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி என்னுள்ளம் அழலிடை இழுதுபோல் உருகியது. "இறைவன் தம்மைப் பழிப்பவரை உடனே அழிக்கவேண்டாமா" என்று நினைத்தேன். "நான் இறைவனாக இருந்தால்........" என்றுகூட எண்ணத் துணிந்தேன். இவ்வாறு எண்ணக்கடலில் மூழ்கினேன். நினைவுஅலைகள் என்னை எங்கோ இழுத்துச்சென்றன. இதற்குள் பானுவும் கடலில் புகுந்தான். இருளெனும்குழவி எங்கும் தவழ்ந்தது. நானும்

**கிளாறன்ஸ் மோத்தா, பி. ஏ.**

இல்லம் ஏகஎண்ணி எழுந்து நடந்தேன். வரும்வழியில் மாதாகோவில் மணியோசை என் காதில்விழுந்தது. விரைந்து சென்று கோவிலுள் நுழைந்தேன். அங்கு எங்கும் அமைதி ஆட்சிசெய்தது. பீடத்தின் அருகில் எரிந்துகொண்டிருந்த நந்தாவிளக்கின் மின்னொளி அருகில் என்னை அழைக்கும் அகவல் போலிருந்தது. மெதுவாகப் பீடத்தைநோக்கி நடந்தேன்.

அங்கே சிலுவையில் தொங்கும் யேசுவின் உருவம்கண்டேன். உள்ளுருகி உடலொடுங்கிய அவரை என்றுமில்லா எண்ணத்துடன் சற்றுநேரம் உற்றுப் பார்த்தேன். அன்புடன் என்னை அரவணைக்கக் காத்திருப்பதுபோல் அகன்று விரிந்திருந்த அவரது கைகளைக்கண்டேன். அனபின் ஆழியான அவர் கண்களில் துயரொளி நிறைந்திருந்தது. அவர்உடலில் ஒவ்வொரு உறுப்பும் கிழிந்து செந்நீரில் தோய்ந்திருக்கும் கோரக்காட்சிகண்டு என்னுடல் நடுங்கியது. அவருக்கு இப் பெருந்துயர்தந்த [illegible]

(தொடர்ச்சி [illegible]-ம் பக்கம்)

## அர்ச். பப்திஸ்து டிலாசால் அருளப்பர் பிறந்த 300-வது ஆண்டுவிழா

இவ்வாண்டு உலகமடங்கலும் அறுபத்தைந்து நாடுகளில் உள்ள "கிறிஸ்தியன் பிறதர்மார்" எனப்படும் கத்தோலிக்க துறவிகட்கும், இத்துறவிகளாற் பயிற்றப்பட்ட அன்னாரின் பழையமாணவர்கட்கும், அவர்களிடம் கல்விகறகும் இளஞ்சிறுவர்கட்கும், அவர்களின் நண்பர்கட்கும் ஒருபுனிதஆண்டாகும். கிறிஸ்தியன் விறதர்மாரின் சபையைத்தொடக்கியவரான அர்ச். பப்திஸ்து டிலாசால்அருளப்பர் பிறந்தமூன்றாம் நூற்றாண்டு உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. நமது அழகிய இலங்கைத்தீவிலும் கத்தோலிக்க கல்வியுலகில் சிறப்புப்பெற்றிருக்கும் இத்துறவிகள் இவ்விழாவை மிகவுஞ்சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள்.

பதினான்காவது லூயிஸ்மன்னன் பிரான்சுநாட்டு அரசுகட்டிலில் அமர்ந்திருந்த 1651-ம் ஆண்டு சித்திரைமாதம் 30-ந் திகதி பப்திஸ்து அருளப்பர் றீம்ஸ்நகரத்தில் பிறந்தார். இவர் பிரான்சுநாட்டுஉயர்குலக் குடிஒன்றைச் சேர்ந்தவர். பல்கலைக்கழகப் படிப்பில் இசையுடன் தேர்ச்சிபெற்று ஒருகுருவாகவந்து மதஊழியம்செய்யத் தொடங்கினர். இக்காலத்தில் பிரான்சுநாட்டில் கல்வியானது செல்வர்களின் தனிச்சொத்தாக விளங்கியது. ஏழைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தனர். தொழிலாளரது குழந்தைகளின் நிர்ப்பாக்கியமான நிலையைக் கண்ட பப்திஸ்து அருளப்பர் அவர்களின்பொருட்டுத் தமது வாழ்நாட்களை அர்ப்பணிக்கத் துணிந்தார்.

பொதுமக்கள்குழந்தைகளின் கல்விக்கு முன்னோடியாகத்திகழும் இப்பெருமகனுக்குத் தாங்கள் எத்துணை கடமைப்பட்டிருக்கிறார்கள்என்பதைத் தற்காலக் கல்விஆராய்ச்சியாளர் சிந்திப்பதில்லை. டிலாசால் ஏழைகட்குத் தருமப்பாடசாலைகள் இருந்தாற்போதுமென்று திருப்தியடையவில்லை. கல்வியின் உண்மையான அத்திவாரம் சிறந்த ஆசிரியர்களைப் பயிற்றுவதிலேயே தங்கியிருக்கிறதென்பதை அவர் தீர்க்கமாகத் தெளிந்தார். [illegible]ஆசிரியர்களையும், இல் [illegible]ஆசிரியர்களையும் பயிற்றும் பொருட்டுப் போதனாசாலை ஒன்றையும், துணையாகச் சாதனாசாலைஒன்றையும் நிறுவினார். கல்விவரலாற்றில் முதன்முதல் நிறுவப்பட்ட ஆசிரியபயிற்சிக் கலாசாலை இதுவேயாகும்.

கல்விமுறையில் புதியதிருத்தங்களை வகுத்ததுமன்றி, இதுவரை இலத்தீன்மொழிமூலம் கற்பிக்கப்பட்ட பாடங்களைத் தாய்மொழிமூலம் போதிக்க ஆரம்பித்தபெருமையும் இவ்வடிகளுக்கேஉரியது. தனித்தனி மாணவரைக் கற்பித்துவந்த முறையைநீக்கி வகுப்புமுறைக் கல்வியைப் புகுத்தியவரும் இவரே.

இக்காலத்தில் நுண்தொழிற் பயிற்சியைப்பற்றிப் பேசப்படுகிறது. 1698-ம்ஆண்டளவிலேயே நுண்தொழிற்பயிற்சிப் பாடசாலைகளை டிலாசால் நிறுவினார். கைத்தொழிற்பாடசாலைகளைநிறுவிப் பலதொழில்களையும் போதித்தார். மத்திய வகுப்பினரின் பிள்ளைகளையும் மறந்தாரல்லர். அவர்கட்காக விடுதிப்பாடசாலைகளையும், உயர் வகுப்புப் பாடசாலைகளையும்நிறுவினர். இவைமட்டுமா? தீமையிற்பயின்ற குற்றவாளிகளான சிறுவர்களின்பொருட்டுச் சீர்திருத்தப்பாடசாலையும் நிறுவினர். ஆசிரியர் கலாசாலையைப் போல முதலாவது சீர்திருத்தப் பாடசாலையை நிறுவினவரும் இவரே.

டிலாசால்வகுத்தகல்விமுறைகளைப் பின் வந்தஆராய்ச்சியாளர் மேற்கொண்டதுமல்லாமல், பெஸ்ராலோசி, பிறிபெல், ஹேறாபாட்முதலிய பேரறிஞர்கள் டிலாசாலைப் பலவாறாகப் பாராட்டியுமிருக்கிறார்கள். தாம் அடியிட்டதொண்டைத்தொடர்ந்து நடத்துவதற்கு ஒருசபையையும் அடிகோலினர். இச்சபையார் கற்பு, அமைவு, வறுமைஎன்னும் மூன்றுவார்த்தைப்பாடுகள் கொடுத்துத் தம் பணியைப் புரிந்துவருகிறார்கள். இவர்களைத்தான் நாம் கிறிஸ்தியன்பிறதர்மார் என்றுஅழைக்கிறோம்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

(தமிழ்ஆக்கம்—வித்துவான் என். எம். ஜே. வேதநாயகம் அவர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பிரான்சின் புதிய மகாலயம்

பரலோக மத்தியஸ்தியாகிய பரமஆண்டவளுக்குத் தோத்திரமாக வருடந்தோறும் ஒரு திருநாள் கொண்டாடுவதாகவும், ஓர்ஆலயம் கட்டியெழுப்புவதாகவும் அப்போது பரீஸ்நகர் அதிமேற்றிராணியாராயிருந்த கருதினல் சூகா ஆண்டவர் 1944-ம் ஆண்டு வைகாசிமாதம் 21-ந் திகதி செய்துகொண்ட வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுமுகமாக, அங்கு பெல்லெவில்நகரிலே மத்தியஸ்தியாகிய தேவதாயாரின்பேரால் கட்டப்படவிருக்கும் பஸிலிக்கா எனும் மகாலயத்துக்குச் சென்ற ஆனிமாதம் 23-ந் திகதியன்று பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான பெல்ரின் ஆண்டவர் அஸ்திபாரக்கல் நாட்டியிருக்கின்ருர். மாதாவுக்கு வாக்குப்பண்ணியதிருநாள் வைகாசிமாதம் 11-ந் திகதி கொண்டாடப்படுகிறது. ஜேர்மனியரிடமிருந்து பரீஸ்நகர் விடுவிக்கப்படும்போது உயிரிழந்தவர்கள் பேரால் அர்ப்பணஞ் செய்யப்படும் ஓர்சிலவறைக்கோவிலையும் இந்த மகாலயம் கொண்டிருக்கும்.

### சவுல்நகரும் கத்தோலிக்கரும்

கோறியயுத்தம் ஆரம்பமானது முதல் கடந்த ஒருவருடத்திலும் தென்கோறியாவின் தலைப்பட்டணமாகிய சவுல் (செயூல்என்று முன்னர் வழங்கியது தவருகும்.) நகரைக் கம்யூனிஸ்த படைகள் நான்குமுறை கைப்பற்றியிருந்தும் பின்னர் நான்குமுறையுமே கைவிட்டுப் பின்வாங்கின. அதன் விளைவாக நிகழ்ந்த எட்டுயுத்தங்களாலும் இன்று பாழடைந்த ஓர் நகர்போல் அது காட்சியளிக்கின்றது. யுத்தத்துக்குமுன் அங்கு வசித்திருந்த 25,000 கத்தோலிக்கரில் இப்போது 300 பேரே இருக்கின்றனர். ஞாயிறுவாரந்தோறும் ஆசனக்கோவிலில் பங்குக்குரவர் வண. ஜோண்சாங் சுவாமியார் நிறைவேற்றும் இருபூசைகளையும் கண்டுவருகிறவர்கள் ஏறக்குறைய 120பேரே. முன்னர் அவ்விசாரணைப்பங்கில் 4,000 கத்தோலிக்கர் இருந்தார்கள். அந்நகரிலுள்ள பன்னிரு விசாரணைப் பங்குகளிலும் மூன்று கோவில்களே இப்போது திறந்துவிடப்பட்டுள்ளன. மூன்று கோறியகுருமாரும், ஒரு கலம்பியன்சபைக் குருவானவருமே இப்போது அங்கு இருந்துவருகிருர்கள்.

### மனந்திரும்பிய சீனப்பிரமுகர்

ஸ்பெயினிலே முன்னர் சீனஅரசின் இராஜீயப் பிரதிநிதியாய் இருந்தவரான திரு. வாலெறெயென் அவர்கள் தமது 53-ம் வயசிலே மனந்திரும்பி மாட்டீன் எனும் பெயர்தாங்கிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்திருக்கின்ருர். மதிரித் நகரிலே பாப்பரசரின் ஸ்தானிகராக இருந்துவருகின்ற சிகொக்ஞனி ஆண்டவரே இவருக்கு ஞானதீட்சையும், உறுதிப்பூசுதலும் அருளினர். ஸ்பானிய வெளிநாட்டு மந்திரியாரின் காரியாலயத்திலே தூரகிழக்குப் பகுதித் தலைவரான ரூமொன் புஜதாஸ் என்பவரே இவரின் ஞானத் தந்தையாயிருந்தார். யுத்தத்துக்குமுன் மாட்டீன் வான்ரெயென பிறசெல்ஸ்நகரிலும், பரீஸ்நகரிலும் சீனவரசின் பிரதிநிதியாய் இருந்துவந்தார்.

### நூறு கருதினல்மார்கள்

பரிசுத்தபாப்பரசர் கருதினல்மார் திருச்சங்கத்தைப் பூரணமாக்கும் தினம் அடுத்த கிறிஸ்மஸ்விழா அன்றேயென இப்போது பொதுவாக நம்பப்படுகிறது. 1586-ம்ஆண்டு ஐந்தாவது சிக்துஸ் பாப்பானவர் கத்தோலிக்க திருச்சபையின் இந்தச் "செனற்" சபை 70 கருதினல்மாரைக் கொண்டதாய் இருக்கவேண்டுமெனப் பிரமாணம் விதித்தனர். தற்சமையம் அதில் 50 கருதினல்மாரே இருந்துவருகின்றனர். இவர்களில் 18 பேர் இத்தாலியர். ஏனைய 32பேரும் பிறசாதியினர். இத்தொகையை நூருகப் பெருக்கிவிடவேண்டுமெனப் பாப்பரசர் இப்போது எண்ணுவதாக வத்திக்கானிலே உறுதியாகநம்பப்படுகிறது. அவ்வாறு செய்வதாலே அதில் பிரதிநிதிகளை முன்ஞெருபோதும் கொண்டிராத நாடுகளும் பிரதிநிதிகளைக் கொண்டிருக்குமாறு அவர் செய்யக்கூடியோராவர். கத்தோலிக்கரைப் பெரும்பான்மையினராகக் கொண்டனவாயிருந்தும் இதுவரை கருதினல்மாரைக் கொண்டிராத ஒவ்வோர்நாட்டிலும் ஒவ்வோர் கருதினலை ஆக்கவேண்டுமென்பதே பாப்பரசரின் கருத்தாகுமென வத்திக்கானில் எண்ணப்படுகிறது. மெக்சிக்கோ, சுவிற்சர்லாந்து, கலம்பியா, வெனசியூலா ஆதியநான்கும் புதியகருதினல்மாரை முதன்முதலாகப் பெறவிருக்கும்நாடுகளில் அடங்குமென நம்பப்படுகிறது.

### பாட்டியின் பெரும்பாக்கியம்

ஆஸ்திறேலியாவிலே பேர்த் நகர்மேற்றிராசனத்தைச் சேர்ந்த ஹோப்வலி எனுமிடத்தில் வசிக்கின்ற ஸ்ரீமதி எம்மா மோட்டிமர்எனும் 90 வயசுடைய கத்தோலிக்கபாட்டியார் 19 பிள்ளைகளும், 194 பேரப்பிள்ளைகளும், 114 பீட்டப்பிள்ளைகளுமாக 227 பேரைத் தனது சந்ததியினராகக் கொண்டிருக்கின்ருர். பேர்த்நகர் ஆசனக் கோவிலை வேய்வதற்கு மரவோடுகள் பாவிக்கப்பட்டதை இப்பாட்டியார் இற்றைக்கும் ஞாபகத்தில் கொண்டிருக்கிருர். இவர் 18-ம்வயதில் விவாகஞ் செய்துகொண்டார். பிந்தஅடெலெயிட்நகர் அதிமேற்றிராணியாராய்வந்த வண. றெய்லி சுவாமியார் விவாகத்தை நிறைவேற்றிவைத்தார். 70 வயசுடைய சகோதரியே பூசைகாண இவரைக் கா[illegible] செலுத்திச் [illegible]

Mal. No. 485. Eng.

## சரித்திர காலத்துக்கு முந்திய சுவர்ச்சித்திரங்கள்

போடோநகரின் கிழக்குப்புறமாக டோர்டொங்ஞ் எனும் பிரான்சியமாகாணம் இருக்கின்றது. இந்தமாகாணத்தின் தென்மேற்குப்பகுதியிலே, மலைகள் அடர்ந்த ஓர்பாகத்திலே, ஒரு தொகையான கோட்டைகளால் சூழப்பட்டதாய் மொர்திஞாய்க்எனும் சிறிய கிராமம் இருக்கின்றது. இந்தக் கோட்டைகளில்ஒன்று, ஷத்தோ தே லாசோ என்பது. 1700-ம் ஆண்டுவரையில் கட்டப்பட்ட இதிலே எவருஞ் சஞ்சரியாதிருந்ததில் ஆச்சரியம்ஒன்றுமில்லை. 1940-ம் ஆண்டு பாடசாலை மாணவர்இருவர் பிரமிக்கத்தகுந்தவிதமாய்க் கண்டறிந்து வெளிபபடுத்தியிராவிடின் இந்தக்கோட்டை அநேகமாய் ஒருபோதுமே பொதுவாக அறியப்படாதிருக்கும். அழிந்துகிடக்கும் இந்தக் கோட்டையின் பாழ்மனைகள் மத்தியிலே அவர்கள்தற்செயலாக வழிதவறி அலைந்தபோது, நிலமாடங்களுள் ஒன்றிலே சரித்திரகாலத்துக்குமுந்திய ஓர் தொகையான பூர்வீக சித்திரங்கள் இருக்கக் கண்டுபிடித்தார்கள். பிந்த நிபுணர்கள் ஆராய்ச்சிசெய்து, இந்தச் சித்திரங்கள் எப்போதாவது கண்டறியப்பட்டவைகளிலெல்லாம் அதிகம் பழையனவென்றும், அவைகள் சுமார் 25,000 வருடப் பழையகாலத்தனவாய் இருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

அத்தகைய பெரும்பாலான சித்திரங்களைப்போலவே, அவற்றில் வர்ணிக்கப்பட்டிருந்த விஷயங்களும் ஆடுமாடுகள், கலைமான்கள், குதிரைகள்போன்ற மிருகஇராச்சியத்தில் பெரும்பாலும் அடங்காதனவாய், ஓர்கால் மனிதனுக்கும் மிருகத்துக்குமிடையில் யுத்தத்தையே வர்ணிப்பனவாய் இருந்தன.

இஃது ஏற்கனவே தூரமான பூர்வகாலத்திலே மனிதன் மிருகஇராச்சியத்தில் கரிசனைகொண்டிருந்தான் என்பதையும், நன்குபுலப்படாத அப்புராதனகாலத்திலே மிகப்பெரியமிருகங்களே அறியப்பட்டிருந்தன என்பதையும் காண்பிக்கின்றது. மிகச்சிறிய செந்துக்களைப்பற்றி அற்பமாகவே அறியப்பட்டிருந்தது. பிந்தித்தான், அதிகம்பிந்தித்தான் அத்தகையசெந்துகள் மட்டிலும் கரிசனைசெலுத்தப்பட்டது. படிப்படியாக வெற்றுக்கண்ணுல் அவதானிக்கப்படமுடியாத சீவசெந்துக்களிலும் கரிசனைஎடுக்கப்படலாயிற்று. பூதக்கண்ணுடி அதிகம்பூரணமாய் வரவர, அதிகமானவை வெளிக்குவரலாயின.

அங்ஙனம் கண்டுபிடிக்கப்பட்டவைகளில் மகாவிசேஷப்பட்டஒன்று, சந்தேகமறவே சேர் றெனல்ட் றெஸ் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். 19-ம் நூற்ருண்டின் இறுதியிலே அவர் மலேரியாகண்டு வருந்துகிறவர்களின் இரத்தத்தில் கொடிய சுரங்கள் உண்டாவதற்குக்காரணமான தொற்றுக்கிருமிகள் இருப்பதாகக் கண்டுபிடித்தார்.

மலேரியாவானது, உலகின் ஒவ்வோர் அயனாந்தரநாட்டிலும் லட்சக்கணக்கானமக்களைப் பீடித்துவருகின்ற ஓர் நோயாகும். ஆகையால், குயினைனிலே ஓர்சித்திகரமானமருந்தை விஞ்ஞானம் கண்டுபிடித்திருப்பது அத்துணைபெரும் விசேஷப்பட்டதாகும்.

தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தினல் நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்பிற்றியாலே, 1938-ம் ஆண்டு அதுவிடுத்த அறிக்கையிலும் இந்தமருந்து சிபாரிசு பண்ணப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே மலேரியா உண்டாகக்கூடுமென அஞ்சப்படுகிற காலம்முழுவதும் இனிமேல் [illegible] கிறேய்ன் குயினே[illegible] மலேரியாகாணுமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குப் 15 முதல் 20 கிறேய்ன் குயினைனும் பாவித்துவரவேண்டுமென அது ஆலோசனை கூறியிருக்கிறது.

இந்தச்சிபாரிசுகளை மேற்கொள்வதாலே ஒருவர் இந்தமலேரியாநோயிலிருந்து தப்பிக்கொள்வதற்குச் சிறந்த உத்தரவாதத்தைக் கொண்டிருக்கின்ருர்.

## யாழ்ப்பாணக் கிருஷிக பாடசாலைக் கமக்காரப் பிள்ளைகளின் ஒருவருடப் பயிற்சி

மேற்கூறிய பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தங்களுடைய விண்ணப்பப்பத்திரங்களை 1951-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 15-ந் திகதிக்குமுன்பதாக யாழ்ப்பாணக் கிருஷிகப் பாடசாலை அதிபருக்கு அனுப்பவேண்டும். மேற்கூறிய விணணப்பம்செய்வோர் 17 வயதிற்கு மேற்பட்டவராயும் 22 வயதிற்குட்பட்டவராயும் வடமாகாணத்தவராயும் தமிழில் எழுத வாசிக்கத்தெரிந்தவராயும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்தையும் வேறு உங்களுக்குத்தேவையான விஷயங்களையும் மேற்படி பாடசாலை அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

R. D. கதிர்காமர்,
அதிபர்
கிருஷிகப் பாடசாலை
யாழ்ப்பாணம்.

## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 13-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 17 : 11—19)

அக்காலத்தில் யேசுநாதர் எருசலேம்நகருக்குச் செல்லுகையில் சமாரியா, கலிலேயா என்னும் நாடுகளின் நடுவே அவர் போகும்படி நேர்ந்தது. அவர் ஓர் கிராமத்துக்குட் பிரவேசிக்கையில் குஷ்டரோகிகளாகிய பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து தூரத்திலேநின்று: போதகராகிய யேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும் என்று உரத்தசத்தமாய்ச் சொன்னர்கள். அவர்களை அவர்கண்டவுடனே; நீங்கள்போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்ருர். அவர்கள்போகும்போதே சொஸ்தமானர்கள். ஆனல், அவர்களில் ஒருவன் தான் சொஸ்தமானதைக்கண்ட மாத்திரத்தில் உரத்தசத்தத்தோடு சர்வேசுரனைத் துதித்துக்கொண்டேதிரும்பிவந்தான். அவருடைய பாதங்களுக்குமுன்பாக முகங்குப்புறவிழுந்து நன்றியறிந்ததோத்திரஞ் சொன்னன். இவனே சமாரியனுயிருந்தான். ஆதலால், யேசுநாதர் மறுமொழியாகச் சொன்னதாவது: பத்துப்பேரும் சொஸ்தமானர்களல்லவோ? மற்ற ஒன்பதுபேரும் எங்கே? இந்தஅந்நியனெழிய வேருருவனுந் திரும்பிவந்து சர்வேசுரனுக்குத் துதிசெலுத்தக் காணேமேளென்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்துபோ; ஏனெனில், உன் விசுவாசம் உன்னைச் சௌக்கியப்படுத்திற்று என்ருர். கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு சங்கதிகள்

—டக்டர்மார், இஞ்சினீர்மார், ஆசிரியர்களாகத் தொண்டாற்றுமாறு அடுத்த இருமாசங்களுக்கிடையிலே உலாந்த சர்வகலாசாலை மாணவர்களாய் ஆடவர்களும், பெண்களுமாக 28 பேர் வேதபோதக நாடுகளுக்குப் புறப்படவிருக்கின்றார்கள். இவர்களைத் தொடர்ந்துசெல்ல வேறும் 125 உலாந்த மாணவர்கள் ஆயத்தஞ்செய்து வருகின்றார்கள். இவர்கள் சாதாரண கத்தோலிக்க மிஷனரிமாராகத் தொண்டாற்றி வருவார்கள்.

—பிரித்தானிய அரசின் யுத்தகால பிரதமரான திரு. வின்ஸ்டன் சேர்ச்சில் அவர்கள் எழுதிவரும் யுத்தஞாபகங்கள்பற்றிய புத்தகத்தின் நான்காவது காண்டமும் இம்மாதத்தில் வெளியாகவிருக்கிறது. இதற்கு முந்திய முதலாவது காண்டத்திலே 3,40,000 பிரதிகளும், இரண்டாவது காண்டத்திலே 3,03,000 பிரதிகளும், மூன்றாவது காண்டத்திலே 2,92,000 பிரதிகளும் இதுவரை விலைப்பட்டிருக்கின்றன.

—பாத்திமாபதியிலே வருகிற ஐப்பசிமாதம் 13-ந்திகதியன்று நடந்தேறவிருக்கின்ற பரிசுத்தவருடமுடிவின் திருவைபவங்களுக்குப் பாப்பரசரின் பிரதிநிதியைத்தவிர, உலகின் அநேக பகுதிகளிலிருந்து அநேக கருதினால்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும் சமூகமளிக்கவிருக்கின்றார்கள். நியூயோர்க், லையன்ஸ் முதலாம் நான்கு நகர்களின் கருதினால்மாரும் இவர்களில் அடங்குவார்கள்.

—இந்தியாவிலே சம்பல்பூர் எனும் புதியமேற்றிராசனம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. இது முன்னர் கல்கத்தா, ரஞ்சி, நாகப்பூர்மேற்றிராசனங்களைச் சேர்ந்திருந்த பகுதியை அடக்கியுள்ளது. இதன் முதல் மேற்றிராணியாராய் மொஞ். ஹெர்மன் வெஸ்ரர்மன் எனும் 46 வயசுடைய குருவானவர் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

—பிரித்தானிஅரசு அந்தரங்கமாகக் கட்டியுள்ள நவமான "ஹோக்கர் பி—2067"எனும் போர்விமானமே உலகில் வழிமறித்துப் போராடுவதில் சிரேஷ்டமான ஜெற் போர்விமானமெனத் தற்போது அறிவிக்கப்படுகிறது. அதனால் இந்தப்போர்விமானம் றோயல் ஆகாய விமானப்படைக்கென்று உடனே தானே பெருந்தொகையாகக் கட்டப்படவிருக்கிறது.

—பிறேசில் நாட்டைச்சேர்ந்த றையோகிறன்டே நகரிலுள்ள கத்தோலிக்க சர்வகலாசாலையைப் பாப்பரசரின் சர்வகலாசாலை வரிசைக்குயர்த்தும் அதிகாரப்பத்திரம் "ஐக்ரா அப்போஸ்ரொலிக்கா சேடிஸ்" எனும் வெளியீட்டில் பிரசுரமாகியிருக்கிறது. இத்துடன் தற்போது உலகில் 23 பாப்பரசரின் சர்வகலாசாலைகள் இருக்கின்றன.

—வத்திக்கான் வெளியிட்டிருக்கும் பிந்தியபுள்ளி விபரப்படி தற்போது உலகமுழுவதிலும் 40 கோடி கத்தோலிக்கரும், 20 கோடியே 20 லட்சம் புறொட்டஸ்தாந்தரும், 16 கோடியே 13 லட்சம் பிரிவினைச்சபைக் கிறீஸ்தவர்களும், 29 கோடியே 60 லட்சம் முஸ்லீம்களும், 25 கோடியே 20 லட்சம் இந்துக்களும், 11 கோடியே 80 லட்சம் புத்தர்களும் இருந்துவருகிறார்கள்.

— நெல்வயல்களிலுள்ள நெற்பயிர்களுக்குச் சேதமுண்டாகாதவகையிலே அவற்றிலுள்ள களைகளைக் கொன்றழிப்பதற்கு 2, 4—டி என்னும் பவுடர் மிகச்சிறந்த ஓர் வஸ்துவென்று அமெரிக்காவிலே நெல்வேளாண்மைசெய்கிறவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். ஆனால், சரியான காலத்திலே, சரியானஅளவிலே அதைப் பிரயோகிப்பதில் கூடியகவனம் எடுக்கப்படவேண்டுமாம்.

## பொதுவர்த்தமானம்

### பிரித்தானியின் புதியதளம்.

பெல்ஜியதேசஅன்ற்வேப்மாகாணத்திலே சுமார் 1,600 ஏக்கர் விஸ்திரணமானநிலத்தில் பாரியபிரித்தானியதளம் ஒன்றை அமைக்கும் விஷயமாய் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. ஐரோப்பாவின் பிரதமசேனாபதியாகிய ஜெனறல் ஐசென்ஹோவாது அதிகாரத்தின்கீழ் பிரித்தானிக்குவெளியே ஐரோப்பாக்கண்டத்தில் பிரித்தானியபடைகளை நிறுத்திவைக்கும் பிரதமதளம் இதுவாகும். 26 பாடிவீடுகளையும், பெரிய எண்ணெய்க்கிடங்குகளையும் இதுகொண்டிருக்கும். வடஅத்திலாந்திக் உடன்படிக்கைஸ்தாபனத்தின் ஓர்பகுதியாக இந்தத்தளம் இருந்துவரும். இதனை அமைக்க ஏற்படுஞ்செலவு ஒருகோடி பவுண். இதனை அவ்வுடன்படிக்கையில் சேர்ந்துள்ள நாடுகளெல்லாம் பொறுக்கவிருக்கின்றன.

### எவறெஸ்ற் சிகரஏற்றம்

பிரித்தானியபோரான மலையேற்றகாரரான திரு. எறிக் ஷிப்ரன் அவர்கள் இமயமலையிலே உலகின் மகாஉன்னதமானதாய் இதுவரை உச்சிமட்டும்ஏறி வெற்றிகொள்ளப்படாதிருக்கும் எவறெஸ்ற்சிகரத்திலே இந்தக்கார்காலத்திலே ஏறமுயற்சித்து வருகின்றார். தற்போது 44 வயசு உடையவரானஇவர் இதற்குமுன் நான்குமுறை அதிலேறமுயன்றும் பிரதிகூலமடைந்தனர். என்றாலும் மனஞ்சோராது 'வெள்ளைக்கோபுரம்' எனப்படும் 29,002 அடி உயரமான அச்சிகரத்தில் ஏறவிருக்கும் ஆராய்ச்சிக்கோஷ்டிக்குத் தலைமைவகிக்கப் போகின்றார். தற்போது சீவந்தராய் இருக்கும் மலையேற்றகாரருளெல்லாம் அதிகமாக மலையேறியிருப்பவர் இவரேயாம். ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் மாத்திரம் மலையேற்றத்திற்கெனப் பதின்மூன்றுபிரயாணங்கள் நடத்தியிருக்கின்றார்.

### மாங்கொட்டைப் பருப்பு

மாம்பழத்தில் விற்றமின் சத்துகள் அதிகமாகஇருப்பதுபோலவே, மாங்கொட்டைப்பருப்பிலும் அதிகசத்துகள் இருக்கின்றன. அதனால் மாங்கொட்டைப்பருப்புகளைச் சேகரித்து உலர்த்தியபின் ஆகாரமாக உபயோகிப்பது சிறந்ததாகும். இந்தப்பருப்பில் கார்போ ஹைட்றேட், கொழுப்பு, உலோகச்சத்துகள் அதிகமாயுள்ளன. அரிசி, கோதுமை, சோளம், பாளி ஆதியனவற்றில் உள்ளதிலும்பார்க்க இதிலே அதிகமானகொழுப்பும், சுண்ணாம்புச்சத்தும் இருக்கின்றன. மாங்கொட்டைகளைக் காயவைத்தபின் பருப்பைஎடுத்து மாவாக்கியும் அல்லதுஅதனைவறுத்தும், வேகவைத்தும் உணவாக உபயோகிக்கலாம். இதன் மாவைக் கோதுமை மாவுடன்கலந்தும் உபயோகிக்கலாம்.

### பெரிய சாப்பாட்டு இராமன்

ஆஸ்திரியாவின் தலைப்பட்டணமாகிய வீயன்னாநகரிலே ஓர்மோட்டர்காரச்சாரதியும், எட்டுப்பிள்ளைகளுக்குத் தகப்பனுமான அலோயிஸ் ஸதஸ்கி என்பவன் பட்டினிவிரதம் அனுட்டிப்பவர்களின் செய்திபொன்றைப் பத்திரிகையில்வாசித்துவிட்டு உலகில்தானே மகாப்பெரிய சாப்பாட்டுஇராமனாகப் பெயர்வாங்கவேண்டுமெனத் தீர்மானித்தான். அதனால் ஒரேமுறையில் 182 முட்டைகளையும், நான்குறாத்தல் குதிரைமாமிசத்தையும் பச்சைப்படியே வயிறுபுடைக்க உண்டு பெயர்வாங்கிப் பிரஸ்தாபம் அடைந்திருக்கின்றான். அத்தனைமுட்டைகளையும் குதிரைமாமிசத்தையும் சாப்பட்டுமுடிக்க அவனுக்கு 4 மணித்தியாலம் 36 நிமிஷம் 12 செக்கன் பிடித்தது. வீயன்னாநகர்வாசிகளின் பெரியசனக்கூட்டமொன்று இந்தக்காட்சியைப் பார்த்துநின்றது.

# குருப்பட்டாபிஷேக வைபவம்

வங்காலை சந்தானுமாதாவின் புதுப்பிக்கப்பெற்ற ஆலயத்தில்

யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய

**மகாவந். J. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.**

ஆண்டவரவர்கள்

**வண. A. பிரான்சிஸ் குலாஸ், O. M. I.**

விறதர் அவர்கட்கு

திருப்பட்டமாகிய குருப்பட்டம் அருளுவார்.

### நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 16-8-1951 | வியாழக்கிழமைமாலை 5 மணிக்கு மேற்றிராணிஆண்டவர் அவர்களின் வரவு, புதியகோவில் ஆசீர்வதிப்பு, நன்றித்தோத்திர ஆசீர்வாதம், மேற்றிராணிஆண்டவருக்கு உபசாரணை. |
| 17-8-1951 | வெள்ளிக்கிழமைகாலை 7 மணிக்கு குருப்பட்டாபிஷேகச்சடங்கு. |
| 18-8-1951 | சனிக்கிழமைகாலை 7 மணிக்கு பதியகுருப்பிரசாதியின் முதல் திவ்வியபூசை. முற்பகல் 10 மணிக்கு உபசாரணையும், வீட்டுக் கொண்டாட்டமும, பின்னேரம் 4 மணிக்கு முதற்சற்பிரசாத ஆசீர்வாதமும். |
| 19-8-1951 | ஞாயிற்றுக்கிழமைகாலை 7 மணிக்கு புதியகுருவரின் முதற்பாடற் பூசை. |

கவனிப்பு:—(1) 16-ந்திகதி வியாழக்கிழமைபின்னேரம் 5 மணிக்கு வங்காலைக் கிறீஸ்தவர்களும், அயலூர்க் கிறீஸ்தவர்களும் ஒன்றாய்ச்சேர்ந்து நின்று வங்காலைப்பிரதமசந்தியில் மேற்றிராணிஆண்டவரை வரவேற்றல்.

(2) சந்தானுமாதாவின் புதுப்பிக்கப்பட்ட ஆலயத்தில் முதன்முதல் நிறைவேறும் குருப்பட்டச்சடங்கு இதுவே. கிறீஸ்தவர்கள் தவறாமல் இந்தச்சடங்கைக் கண்ணுற்று நன்மை அடைவார்களாக.

(3) குருப்பட்டத் திருச்சடங்கு விளக்கப்புத்தகம் 17-ந் திகதிகாலை கோவில்கதவில் இனமாகக் கொடுக்கப்படும். அதையும்பெற்று வாசித்துப் பலனடைவார்களாக.

சந்தானுமாதாகோவில்
வங்காலை.

S. Gomez, O. M. I.
கட்டளைக்குரவர்.

## தமிழ் எழுத்துகள்

தமிழ்எழுத்துக்களில் திருத்தங்கள் ஏற்படுவது அவசியமா? அப்படியாயின் அவைகள் யாவையென்பதை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கெனச் சென்னைஅரசினரால் அமைக்கப்பட்ட சபை தனதுஅறிக்கையை வெளியிட்டுள்ளது. இவ்விசாரணைச் சபையின் சிபாரிசை அரசினர் அங்கீகரித்து அதனை நடைமுறைக்குக் கொண்டுவரவும் முடிவுசெய்துவிட்டனர். இந்திய அரசினர் இத்திருத்தங்களை இனிஏற்றுக்கொள்வர். பாடசாலைகளில் உபயோகிக்கப்படும் பாடபுத்தகங்களிலும் இத்திருத்தங்கள் கட்டாயம் ஏற்படவேண்டுமென்று அரசினர் முடிவுசெய்துள்ளனர். அவைகளை அங்கீகரித்த பாடபுத்தகங்களே அரசினரால் அங்கீகரிக்கப்படுமெனத் தெரிகிறது. சென்னை, அண்ணாமலைச் சர்வகலாசாலைகளுக்கும் இப்புதியதிருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவைகளும் இப்புதுமுறையான திருத்தஎழுத்துகளைத் தாராளமாக ஆதரித்துநிற்கின்றன. இப்புதியதிருத்தங்களால் எழுத்துக்களின்தொகை குறைக்கப்படுவதன்றி வேறுஎவ்வித புதியமாற்றமும் ஏற்படமாட்டாது. தமிழ்ப்பத்திரிகைகளை விரைந்துஅச்சிட்டு வெளியிடுதற்கு இத்திருத்தங்கள் பேருதவியாகும். தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் இத்திருத்தம் புதியமாற்றங்களைக் கொண்டுவரவில்லை. தமிழ்எழுத்துகளை ஒழுங்குபடுத்துவதற்கும், அச்சுக்கோக்கும் யந்திரங்களிலும், டைப் அடிக்கும் யந்திரங்களிலும் வசதியாக அமைப்பதற்குமே பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளக் கூடியவகையிற் குறைந்தஅளவு மாறுதல்களைச் சபை வகுத்துள்ளது. திருத்தப்பட்ட முறைப்படி தமிழ் எழுத்துக்களின் தொகை 91. இன்றுஉள்ள தமிழ் அச்சுஎழுத்துக்களின்தொகை 133.

உயிரெழுத்துக்களில் மாற்றம்எதுவுமில்லை. ஆனால், ஈ என்னும் எழுத்துக்குப்பதிலாக இ சுழித்து எழுதப்படும். உயிர்மெய்எழுத்துக்களில் உகரம் ஊகாரம்தவிர மற்றக் குறில் நெடில்களுக்கு ஒரேவிதமான எழுத்தமைப்பு பொதுவாகப் பின்பற்றப்படும். ஃஉயிர்க்குறில் மெய்யெழுத்துடன் இணைக்கப்பட்டிராமல் தனியாக எழுதப்படும். இதனால் பாதிக்கப்படுபவை இ, ஈ என்ற மெய்சேர்ந்த உயிரெழுத்துக்களும், லை, ளை, னை, ணை, ஞ, ண ஆகியவைகளுமாகும். இவை லை, ளை, னை, ணை, னா, ணா என்று எழுதப்படும்.

பண்டைக்காலத்தில் எகர ஒகர உயிர்மெய்க்குற்றெழுத்துக்கள் மேலே புள்ளிவைத்து எழுதப்பெற்றன. உதாரணம்: கெ்், பெ்், செ்் (இவைகள்குற்றெழுத்து. கெ, பெ, செ. (புள்ளி பெறாதஇவை நெட்டெழுத்து. கே, பே, சே என்று இவைவாசிக்கப்பட்டன.) கொம்புபெற்றுவருகிற இந்த எழுத்துக்கள் குற்றெழுத்துக்கும் நெட்டெழுத்துக்கும் ஒரேமாதிரி எழுதப்பட்டபடியால், அவற்றின்வித்தியாசத்தை எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு, வீரமாமுனிவர் நெட்டெழுத்துக்குக் கொம்பை மேலே சுழித்தெழுதும் வழக்கத்தை உண்டாக்கினர். இவர்செய்த இவ்வெழுத்துச் சீர்திருத்தம் படிப்பதற்கும் எழுதுவதற்கும் தெளிவாக இருக்கிறபடியால், இவர்அமைத்த முறைப்படியே இப்போதும் வழங்கிவருகிறது.

---

—கோறியாவிலே யுத்தங்காரணமாக வீடுவாசல்இழந்து போஷணைக்குறைவாலும், பிணியாலும் வாடுகிறவர்களுக்குச்சகாயமாய் அமெரிக்கக்கத்தோலிக்க மக்கள் இதுவரை 11 லட்சம் றாத்தல் உணவும், 3 லட்சத்து 47 ஆயிரத்து 378 றாத்தல் புடவையும், 1 லட்சத்து 31 ஆயிரத்து 710 றாத்தல் மருந்துமுதலியவைகளும் அனுப்பிவைத்திருக்கின்றார்கள். கோறியாவுக்குச் செய்யப்பட்டுள்ள சுயேச்சையான இவ்விதஉதவியிலே மூன்றிலிருபங்குக்குமேல் அவர்களாலேயே அனுப்பிவைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஆவணிமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| வெ | 10 | அர்ச். லவுறேஞ்சியார் | (சி) |
| சனி | 11 | அர்ச். திபுர்சியார் | (சி) |
| ஞா | 12 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 13-ம் ஞாயிறு — அர்ச். கிளாரம்மாள் | (ப) |
| திங் | 13 | அர்ச். இப்பொலித்து | (சி) |
| செ | 14 | அர்ச். எயுசேபியார் | (ஊ) |
| புத | 15 | தேவமாதா பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாள் (கடன்) | (வெ) |
| வியா | 16 | அர்ச். சுவக்கீன் | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
ஆவணிமாதம் 9-ந் திகதி

## புதிய குருப்பிரசாதி

"மகனே! இன்றுநான் உனக்காக மன்ருடிக்கொள்வேன். சர்வேசுரன தமது ஞானக்கொடைகளால் உன்னை நிரப்ப வேண்டுமென்பதே எனதுபேராவல். நீ அவருக்கு உகந்தகுருவாகி மகா உந்நத கொடையாகிய திவ்வியபூசைப் பலியைத தகுந்தவிதமாய ஒப்புக்கொடுக்குமபடி அவர் தமது வரப்பிரசாதங்களை உன்மேல் நிறைவாகப் பொழிந்தருள்வாராக! எங்கள்மகன், ஏகபுதல்வன், தலைப்பிள்ளை குருவாய்வந்தது எங்கட்கு எத்துணைபெரும் பாக்கியம்! ஓர்தாய் தனது மகன் அரசனவதைக்கண்டு ஆனந்திப்பாள். ஆனல், குருவானவர் அரசனைவிடமேலானவர். ஏனெனில், இராசாதிராசன் அவருக்குக்கீழ்ப்படிந்து பரலோகத்தினின்று இறங்கி வருகிருர்.

"மகனே! என்முழுஇருதயத்தோடும் உன்னை வாழ்த்துகிறேன். 'என் ஆத்துமமானது ஆண்டவரில அகமகிழ்கின்றது.' உன்பேரால் 'தெதேயும்' என்னும் தேவதோத்திர கீதத்தைப் பாடி ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். உனது இராசாவாகிய திவ்வியயேசுவுக்குஉன்னைக்கையளித்த நீயே பெரும்பாக்கியசாலியானுய். நீ அடைந்துளள பெருமபாக்கியத்தையிட்டு நான் மிகமகிழ்ச்சியடைகின்றேன். உனதுதந்தையும் சந்தோஷசாகரத்தில் அமிழ்ந்தியிருக்கிருர். உன்னை வெகுவாக நேசிககிறநான் என் முழுஇருதயத்தோடும் உன்னை ஆசீர்வதிக்கிறேன்" என்று அன்றொருநாள் லூயிஸம்மாள் தேராஸ் எனுமபத்தியுள்ள ஓர் பிரான்சிய செல்வமாது தனது புதல்வர் குருப்பட்டம பெறும் தினமன்று எழுதித் தனது ஆபரணங்கள்கொண்டு செய்த பூசைப்பாத்திரம ஒன்றையும் அவருக்கு வெகுமதியாக அனுப்பிவைத்தாள். அந்த மாதரசாளைப்போலும் குருத்துவஅழைத்தலின் மகிமையை உணர்ந்து தங்கள் அருந்தவப் புதல்வர்களை அதற்கெனத் தியாகஞ்செய்துளள தாய் தந்தையர்பலர் எம தமிழ்நாட்டிலும் இருந்துவரக்காணபது சந்தோஷமே. ஆயினும் இன்னும்அதிகமானேர் அத்தகைய பரித்தியாகஞ்செய்தாலோ என நாம்ஆசிப்பது மனிதசுபாவமே.

நிற்க, நம்முடைய திவ்விய கர்த்தர் மறுரூபமான திருநாளாகிய சென்ற 6-ந் தேதி திங்கட்கிழமைகாலை 7 மணிக்கு நம் மேற்றிராணியாண்டவர் குருமார்குழாமுடன் ஆசனக்கோவிலுக்கெழுந்தருளி அங்கே வண. எட்றியன யோசெவ் பிறதருக்குக்குருப்பட்டாபிஷேகஞ் செய்தருளினர். அத்தருணம் புதிய குரவரின் பெற்ருர், சகோதரர், சகோதரிகளும், சுற்றத்தவர்களும், மற்றையோருமாகப் பெருந்திரளானேர் கோவிலிற் சமுகமாயிருந்து, பெரிதும் கவர்ச்சிகரமான குருத்துவ திருச்சடங்குகளைப்பற்றித் தியானித்துப் புதிய குருப்பிரசாதிக்காக மன்ருடிக்கொண்டார்கள். அதன்மேல் புதியகுரவர் ஏனைய குருமார்சமேதராய் மேற்றிராசனமாளிகை சென்றபோது, அங்கு மேற்றிராணியாண்டவர் அவரைவரவேற்று, குருத்துவ குடும்பத்தில் அவர் சேர்ந்து கொண்டதையிட்டுத் தமக்குண்டான மகிழ்ச்சியைத்தெரிவித்துச் சோபனங் கூறலாயினர். பின்னர் பெற்ருேரும், மற்ருேரும் புதியகுரவரின் அபிஷேக திருக்கரங்களை முத்தமிட்டு அவரதுஆசிபெற்றுநின்ருர்கள்.

வண. எட்றியன் யோசெவ் சுவாமியவர்கள் யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்குப் பல அருமையான குருப்பிரசாதிகளைத்தந்த அச்சுவேலியைத் தமதுஜனனபதியாகக் கொண்டவர். அங்கு "சன்மார்க்க போதினி" ஆசிரியராய், ஞானப்பிரகாச அச்சியந்திரசாலை அதிபராய், ஓர் வரகவியாய், பெரியமனுஷராய்,வண.சுவாமி. ஞானப்பிரகாசரின் சிறிய தந்தையாராய்ப் பிரஸ்தாபமாக வாழ்ந்திருந்த ஸ்ரீ எஸ். தம்பிமுத்துஅவர்களின் பீட்டப்பிள்ளை. அவரது சிரேஷ்ட புதல்வரான டொமினிக் தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் பேரப்பிள்ளை. இவரின் சிரேஷ்டபுதல்வியான ஸ்ரீமதி இராக்கினி மாகிறேற்—மது பரிபாலன பரிசோதகராயிருந்து இளைப்பாறியிருக்கும் ஸ்ரீ பெனடிக்ற் யோசெவ் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வர். அதனல் இவர் தமதுஊரவரான அநேக குரவர்களையும், செவாலியர்கள், ஸ்ரீ ஹென்றி தம்பிமுத்து முதலாம் அநேகபிரமுகர்களையும் தமதுசுற்றத்தவராகக் கொண்டுள்ளாரென்பது தானேபோதரும். இவர் தமது உந்நதபதவிக்குரிய மகா உத்தரவாதம் பொருந்தியகடமைகளை இனிதே ஆற்றிவர எல்லாம்வல்ல இறைவன் திருவருள்பாலிப்பாராக!

—லூர்து திருப்பதிக்குத் தங்கள் வருடாந்த யாத்திரையிற்சேர்ந்து சமீபத்திலே 22,000 பேருக்குமேற்பட்ட பிரான்சிய யுத்தவீரர்கள் அங்குயாத்திரை செய்துள்ளார்கள் பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான பெல்ரின் ஆண்டவர் பிரசங்கஞ்செய்தனர். 1947-ம்ஆண்டு இந்தயாத்திரை ஆரம்பிக்கப்பட்டபோது, 2,000 வீரர்களே அதிற்கலந்துகொண்டார்கள்.

### யாழ்ப்பாணம்

# அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

கடற்கரைத் தெருவிற் கணித்தாய்க் கட்டப்பட்டுள்ள புதுக்கோவிலில் திருச்சுரூபம் கொண்டெழுந்தருளிப் பலவகையான நோய்களாற் பீடிக்கப்பட்டோருக்கெல்லாம் பெரும்சகாயங்களைப் புரிந்துவரும் அற்புதவரத்தர் ஆராதிஷ்ட ஆரோக்கியநாதரின் வருடாந்ததிருநாட் கொண்டாட்டங்கள் இம்மாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ந் திகதி திங்கட்கிழமை பெரியபாடற்பூசையுடனும் திருச்சுரூப சுற்றுப்பிராகாரத்துடனும் முடிவாகும்.

**கவனிப்பு :—** காணிக்கை மெழுதுவர்த்திகள் கோவிற்பொறுப்பில் விற்கப்படுவதால், எவரும் கோவிலுக்கருகாமையில் மெழுகுதிரிவிற்க உத்தரவில்லை.

P. T. யேம்ஸ், O. M. I.
கட்டளைக்குரவர்

## அந்த மகாநாடு

ஐக்கியநாடுகளின் பிரதிநிதிகளுக்கும், சீன - வடகோறிய கம்யூனிஸ்த பிரதிநிதிகளுக்குமிடையே கெசோங் எனுமிடத்தில் நடைபெற்றுவந்த யுத்தநிறுத்தமகாநாட்டின் போக்கைக் கவனிக்குமிடத்து அஃது ஓர் யுத்ததந்திரமென்றே கொள்ளவேண்டும். இந்தமகாநாட்டைக் கூட்டவேண்டுமெனச் சோவியற்அரசே முன்வந்து கேட்டுக்கொண்டது. அதன் கேள்விப்படி கூடிய மகாநாட்டின் இழுபறியான நடவடிக்கைகளைக்கொண்டு அது பழைய திருவிளையாடல்ஒன்றைத் திரும்பவும்நடத்த முனைந்துள்ளதென்பது துலாம்பரமாகின்றது. அப்போது பிறெஸ்ற்-லிற்றெவ்ஸ்க் உடன்படிக்கையைச் சோவியற்அரசு செய்தபோது, சமாதானதாகங்கொண்ட சனங்களைச் சிலகாலந்தாக்காட்டிச் சமாளித்துக்கொண்டு, அதற்கிடையிலே புதிய படைகளை அணிவகுத்துத் திரும்பவும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதே அதன்யுத்ததந்திரமாய் இருந்தது. இப்போதும கோறியயுத்தநிறுத்த மகாநாட்டிலும் அதேதந்திரந்தான் கையாளப்படுகிறதென்பது நன்குபுலனுகிவிட்டது.

கோறியயுத்தத்திலே சீன-வடகோறியபடைகள லட்சக்கணக்கான போர்வீரரை மடியக் கொடுத்துக் களைகொண்டனவாய், பலங்குன்றியனவாய், ஐக்கியநாடுகளின்படைகளை எதிர்த்துநின்று போராடஇயலாதனவாய்ப் புறங்காட்டிச் சென்று படுதோல்விஅடைந்துகொண்டிருந்தசமையம பார்த்து, சோவியற் அரசுயுத்தநிறுத்தமகாநாட்டைக் கூடடவேணடுமென ஓர் அதிர்வெடிதீர்ந்தது அம்மகாநாடும் ஒருவாறு கூடியது. இதுவரை அதுபத்தொன்பதுமுறைகூடியும் ஆனபலன் யாதொன்றுமில்லை. பல சகுனப்பிழைகள்மத்தியில் இடையிடையே நின்றுநின்று, இழுத்திழுத்து நடைபெற்றுவந்த கோறிய யுத்தநிறுத்த சம்பா[illegible]யாகச் சென்ற [illegible] முறிந்துவிட்டன. மகாநாடுகூடிவந்த கெசோங்கிலே எக்கட்சியையுஞ்சேர்ந்த படைகளும இருக்கலாகாதென்ற நடுநிலைமைக் கொள்கையைக் கம்யூனிஸ்தர்கள் மீறிவிட்டமையே அதற்குக்காரணமாகும்.

கெசோங்கிலே மகாநாடுநடைபெற்றுவந்த மாளிகையிலிருந்து சுமார் நூறுயார்தூரத்திலே முதல்நாளன்று ஆயுதந்தரித்த கம்யூனிஸ்தபடையொன்று தலைகாட்டியதிலிருந்து யுத்தநிறுத்த சம்பாஷணைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. அப்படை தவறுதலாக வந்துவிட்டதெனக் கம்யூனிஸ்தர்கள் சமாதானங் கூறுகின்ருர்கள். ஆனல், ஓர் திருப்திகரமான விளக்கம் கொடுபடுகிறவரையிலே, அதுபோலும்சம்பவம் மீளவும் நடைபெறாதென்ற உறுதிவாக்குக் கிடைக்கிறவரையிலே, யுத்தநிறுத்த சம்பாஷணைகளை நிறுத்திவிடுவதென்று ஐக்கியநாடுகளின் தளபதியான ஜெனறல் றிட்ஜ்வே அறிவித்துவிட்டனர். இதற்கிடையிலே வடகோறியாவில் கம்யூனிஸ்தபடைகள் புதிதாகக்கொண்டுபோய்க் குவிக்கப்படுகின்றன. ரூஷிய யுத்தசாதனங்கள் பெருந்தொகையாக அங்குபோய்ச் சரிந்துகொண்டிருக்கின்றன. யுத்தம்மீண்டும் மும்முரமாக நடைபெறத் தொடங்கிவிட்டது. கம்யூனிஸதபடைகள் மீளவும் பின்வாங்கத்தொடங்கிவிட்டன. கோறியாவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்பதே கமயூனிஸ்தர்களின் அபிலாஷையாகும். அவர்கள் இந்தஅபிலாஷையைக் கொண்டிருக்கிறவரையிலே கோறிய யுத்தநிறுத்தம்என்பது முயற்கொம்பாகவே முடியும்என்க!

### காலநிலை

கடந்த ஐந்துமாதகாலமாக நல்ல மழைபெய்யாமையானல் குளங்கள் கிணறுகள் வற்றிக்கொண்டு போகின்றன. வயல்வேலைகளை நடத்திக் கொள்ளமுடியாது கமக்காரர் கஷ்டப்படுகின்றனர். குளிரோடுகூடிய கடுங்காற்றுவீசி வாழைகளை முரித்துத் தோட்டக்காரருக்கு நஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. கண்ணேய், காய்ச்சல் முதலாம் பிணிகள் ஊரிலே தலைகாட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### புதிய குருவரின் முதற்பூசை

ஆசனக்கோவிலிலே சென்ற 6-ந்திகதி குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவரான வண. எட்றியன் யோசெவ் சுவாமியவர்கள் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை அர்ச். மர்த்தீனார் குருமடத்துச் சிற்றாலயத்திலே குருமாரும், தமது பெற்றாரும், சகோதரர் சகோதரிகளும், மற்றும் இனசனர் அன்பர்களும் கூடியிருந்தசமுகத்திலே குருமடத்தலைவர் வண. சாள்ஸ் நவரத்தினம் சுவாமியவர்களைத் துணையாகக்கொண்டு தமதுமுதற்திவ்வியபூசையை நிறைவேற்றினர். அத்தருணம் குருமடத்துமாணவர் பாடகர்குழாம்இன்பகீதங்கள் இசைத்துநின்றது. பூசையிலே சுவாமியவர்கள் முதன்முதலாகத் தமது பெற்றாருக்குத் திவ்விய நன்மை வழங்கினர். பூசைமுடிவில் அங்குசமுகமானோருக்குச் சிற்றுண்டி உபசாரணை ஒன்றுநடத்தப்படலாயிற்று

### சகோதரரின் பரிதாபமரணம்

பெருமாள் கோவிலடியைச்சேர்ந்த 24 வயசுடைய சின்னையா மார்க்கண்டு என்பவரும், 21 வயசுடைய நாகரத்தினம் கனகலிங்கம் என்பவரும், வேறு சிலதொழிலாளிகளும் சென்றதிங்கட்கிழமை பிற்பகல் ஆனைக்கோட்டையிலுள்ள கரையாம்பிட்டிமணற்திடரில் ஓர் லொறியைக் கொண்டுபோய்விட்டு மணல்தோண்டிஏற்றும்போது, மேலேயிருந்த திடர்சரிந்துவிழவே அதனுள் இருவரும் அகப்பட்டுக்கொண்டனர். மார்க்கண்டு அதேஇடத்திலதானே இறந்துபோக, கனகலிங்கம்ஆபத்தான நிலைமையிலே ஆஸ்பத்திரிக்குக்கொண்டு போகப்படும்வழியில் இறந்துபோயினர். இவர்கள்இருவரும் சகோதரமுறையானவர்களாம்.

### கூட்டுறவு மகாநாடு

வடபெரும்பாகக் கூட்டுறவுச்சங்கங்களின் வருடாந்தமகாநாடு இம்மாதம் 17-ம், 18-ந்திகதிகளிலே யாழ்ப்பாணநகரமண்டபத்தில் நடந்தேறும். நிதிமந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் 17-ந்திகதி வெள்ளிக்கிழமைகாலை 9-30 மணிக்கு மகாநாட்டை ஆரம்பித்துவைத்து ஆரம்பவுரை நிகழ்த்துவார். அவரைத்தொடர்ந்து உணவு—கூட்டுறவு மந்திரியார் திரு. ஏ. இரத்நாயக அவர்களும், அவரது மந்திரிகாரியாலய நிரந்தரகாரியதரிசி திரு. ஜி. டி. சொய்சா அவர்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பதில்றெஜிஸ்ருர் திரு. எஸ். பி. ஐற்றவ அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள். இம்மகாநாடு அவ்விருதினங்களிலும் முற்பகலும் பிற்பகலுமாக நான்குமுறைகூடி, எட்டுக்காத்திரமான பிரேரணைகளை நிறைவேற்றவிருக்கின்றது.

### கண்ணாடிச் சாமான்கள்

பெல்ஜியம், யூகோசிலேவியா முதலாம் பிறநாடுகளிலிருந்து சமீபத்திலே ஏராளமான கண்ணாடிச்சாமான்கள் இலங்கையில்வந்து அதிகமலிவாக விலைப்படுகின்றன. ஆஸ்திரேலியாவிலிருந்தும் இப்போது ஏராளமான கண்ணாடிச்சாமான்கள் வருகின்றன. அதனால் சிலவாரங்களுக்குமுன் 60 சதமாக விலைப்பட்ட தம்ளர் ஒன்று இப்போது 20 சதமாக விலைப்படுகின்றது. மற்றுஞ்சில இறக்குமதிப்பொருட்களின்விலை யுத்தத்துக்கு முந்தியகால விலைக்கு இறங்கிவிட்டன. இவ்விதம் பிறநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கண்ணாடிச்சாமான்களின் போட்டிகாரணமாக இலங்கைக்கண்ணாடிக்கைத்தொழில் அழிந்துவிடக்கூடிய ஆபத்தானநிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் இலங்கையிலே கண்ணாடிச் சாமான்கள் செய்கிறவர்கள் கைத்தொழில்உற்பத்திச்சட்டத்தின்கீழ் தங்களுக்குப் பாதுகாப்புக்கோரி அரசினருக்குமனுப்பண்ணியிருக்கின்றார்கள்.

# போளவத்தை ஆலயத்தின் நூற்றாண்டுவிழா

வடமேல்மாகாணத்திலே கம்மல் பற்றைச்சேர்ந்ததாய், நீர்வளநிலவளங்களாலும், பலவித கலைக்கழகங்களாலும் சீர்பெற்றுவிளங்கும் போளவத்தைஎன்னும் புராதனப்பெருமைவாய்ந்த கிராமம்ஒன்றுளது. இதிலே பரமஅன்னை கிருபாசனங்கொண்டுள்ள அழகியதேவாலயமானது பார்த்தோரெல்லாம் பரவசங்கொள்ள வீதியோரமாய் மிளிர்ந்துகொண்டிருக்கின்றது. இற்றைக்குச்சுமார் 300ஆண்டுகளுக்குமுன் கோவைத் தியானசம்பிரதாய சபையைச்சேர்ந்தவரும், சாங்கோபாங்க சுவாமிகளெனச் சிறப்பாக அறியப்படுகிறவருமான யாக்கோமே கொன்சால்வேஸ் சுவாமியவர்கள் இப்பதியை அடைந்தவாலாறு பின்வருமாறு:—

அப்போது கொழும்பு, நீர்கொழும்புப்பகுதிகள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையாலே அவர்எவருக்குமே ஞானதீட்சையருளவோ, ஞானோபதேசம் கற்பிக்கவோ, தேவதிரவியஅநுமானங்களை நிறைவேற்றவோ இயலாதவராய்த் தவித்திருந்தார். எந்தவேளை ஒல்லாந்தர் தங்களைக்கண்டுபிடித்துவிடுகிறார்களோ என்றஅச்சமயம் புதுக்கிறீஸ்தவர்களுக்கும் சுவாமிகளுக்கும் இல்லாமற்போகவில்லை. ஈற்றிலே பிற்றிக்கால்கோறளேயிலே புதியகோவில்ஒன்று கட்டப்பட்டிருந்த கச்சிறுவாஎனும்ஊரையடைந்து அங்கு தங்கியிருந்தார். அப்போது அங்கிருந்த புதுக்கிறீஸ்தவர்களுக்கு நற்போதனைஊட்டி, விசுவாசவெளிச்சத்தில்அவர்களைவழிநடத்திக்கொண்டு வந்தார்.

அக்காலத்திலே கண்டிஅரசனான ஸ்ரீவிஜய இராசசிங்கனுக்கும், ஒல்லாந்தருக்குமிடையே பெருந்தகராறுகள் உண்டாகவே, அரசன் தனது விசுவாசமுள்ள நண்பரான சாங்கோபாங்கசுவாமிகளைத் தன்னிடம் வரவழைத்துத் தனதுஉள்ளக்கருத்துகளை அவரிடம் தெரிவித்தான். அப்போது சுவாமிகள்எடுத்துக்கூறிய ஆலோசனையைக்கேட்டிருந்த அரசன் தனக்குவரக்கூடிய பலவிதஆபத்துகளையும் பறுவாய்பண்ணாது அவர் கூறியபடியே நடக்கத் தீர்மானித்தான். இதனை அறியவந்த வேதவிரோதிகள் பல பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியும் அரசன்எதற்குமே இசைந்தான் அல்லன். ஆயினும், 'அடிமேல் அடி அடிக்க அம்மியும் நெகிழும்' என்பதற்கிணங்க, வேதவிரோதிகள் விடாது கூறிய துர்ப்போதனைகளினால் அரசன் கடைசியாக எடுபட்டு இசைந்துபோகவே, கச்சிறுவாக்கோவில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

ஆயினும் சுவாமிகள் தமது நண்பனான அரசனின் மனப்பான்மையை நன்குஅறிந்தவராகவே, சிலதினங்களில் போளவத்தைஎனும் கிராமத்தை அடைந்தார். தமது அயரா உழைப்பினால் அங்கு வசித்திருந்த மக்கள்பலரைச் சத்தியமறையில் சேர்க்கத்தொடங்கினர். நாளடைவிலே இங்குஅத்திருமறை செழித்தோங்கிவளர்ந்து அவரின் தலைமைத்தானமாயிற்று. அப்போதுசுவாமிகள் தமதுஞானவிசாரணைக்குட்பட்ட கத்தோலிக்கமக்கள் இலேசாக வந்துபோகக்கூடியதும், பெருந்திருநாட்களிலே அச்சமில்லாது ஒன்றுகூடித் தங்கள்ஞானக்கடமைகளை நிறைவேற்றக்கூடியதுமான இடம்எதுவென ஆராய்ந்தபோது, பலகத்தோலிக்க கிராமங்கட்கு அண்மையானதும் முன்னிருந்தகோவிலுக்குச் சமீபமுமான இத்தல[illegible] இங்கே ஒர் புதிய ஆலயத்தைக் கட்டினார்.

முன்னர்கூறியதுபோல அக்காலத்திலே கொழும்பு, நீர்கொழும்புப்பகுதிக் கிறீஸ்தவர்கள் ஒல்லாந்தரின் நெருக்கிடைக்குப்பயந்து அந்தரங்கமாகத்தங்கள்வேதக்கடமைகளை நிறைவேற்றிவந்தார்கள். ஆனால், போளவத்தை சிங்களமன்னனின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையாலே, இது கிறீஸ்தவர்களுக்கு ஓர்பொதுத் தலமாக அமைந்து எல்லாரும்ஒன்றுகூடி விசேடதிருநாட்களைப் பிரசித்தமாகக் கொண்டாடக்கூடியதாயிருந்தது. அதனால்சுவாமிகள் முன்னர்தாம் கட்டிய சிறியஆலயத்தைப் பெரிதாகக்கட்டியெழுப்பினர். அப்போது கொழும்பு, நீர்கொழும்பு, கழுத்துறை, காலி, மாத்துறைமுதலாம் இடங்களிலிருந்தும் கிறீஸ்தவர்கள்வந்து விசேஷ திருநாட்களை இங்கு கொண்டாடிவந்தார்கள். இவர்கள் தங்கிப்போவதற்கேற்ற வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. இன்னும்பலவிடங்களிலுமிருந்த கத்தோலிக்கமிஷனரிமார் வந்துதங்குவதற்கேற்ற வசதிகளையுஞ்செய்துவைத்தார். அத்துடன்அவர்களோடு இலகுவிற் புழங்கத்தக்கதாக இப்பதியைத் தமது வாசஸ்தலமாகவும் ஆக்கிக்கொண்டார்.

போளவத்தையிலே ஆலயமொன்று கட்டப்பட்டிருப்பதை ஸ்ரீவிஜயஇராசசிங்கமன்னன் அறியவந்து, அதனைத்தான் அங்கீகரித்துக்கொண்டதற்குச் சிறந்தஓர் அத்தாட்சியாக அதிலே ஸ்தாபிப்பதற்கெனக் குழந்தையேசுவைக் காத்தேந்திய செபமாலைமாதாவின் சுரூபம்ஒன்றை ஆனைத்தந்தத்தினால் அழகுறச்செய்வித்து ஓர் அன்பளிப்பாக அனுப்பிவைத்தான். அதனைக்கொண்டுசெல்ல மோத்தே பாஸ்குவால்எனும் அரண்மனை உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டார். இவர் கண்டி அதிகாரிகளின் உடையணிந்துவர, அவரைத்தொடர்ந்து கண்டிப்பெரகாரைபோன்று ஆடல்பாடற்காரர் வந்தார்கள். அப்போது போளவத்தைக் கிறீஸ்தவர்கள் சுரூபத்தைக் கையேற்பதற்காக விசித்திரமாய் அலங்கரித்த ஓர்சரோலைக்கூட்டுடன் பவனியாக அரைக்காததூரம் எதிர்கொண்டுசென்றார்கள். சுரூபம்கொண்டுவந்தவர்கள் ஆலயவாயிலைச் சேர்ந்ததும் குரவர் ஒருவர் அங்குகாத்துநின்று அதனைத் தமதுகரத்திலேந்திச் சிலர்பிடித்து வந்த மேலாப்பின்கீழ் பீடத்தை அடைந்து அதற்கெனச் சித்தஞ்செய்திருந்த மாடத்திலே ஆசாரத்துடன் ஸ்தாபித்தார். இதுநிகழ்ந்தது 1741-ம் ஆண்டிலாகும்.

அக்காலத்திலேஇலங்கை தென்னிந்தியமேற்றிராசனத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. இலங்கை மிஷன்களைச்சுற்றி விசாரணைசெய்ய மடுத்தீனுசவியேர் சுவாமிகள் 1742-ம் ஆண்டு சித்திரைமாதம் கொழும்புக்கு வந்தார். இவர்சிலகாலம் கொழும்பிலுள்ள சிறுகோவில்களைச் சந்தித்துக்கொண்டு ஆடிமாத ஆரம்பத்திலே போளவத்தையை அடைந்தார். அப்போது சாங்கோபாங்க சுவாமிகள் நோய்வாய்ப்பட்டுப் பாயும்படுக்கையுமாகக் கிடந்தார். எனினும் அவரை வரவேற்குமாறு படுக்கையை விட்டு எழுந்துபோய் அவரை அழைத்துக்கொண்டு ஆலயஞ்சென்றார். ஆங்கு "தெதேயும்" எனும் தேவதோத்திர கீதத்தைதப்பாடத்தொடக்கிவிட்டு மீளவும்படுக்கையில் சரிந்தார். அதுஅவரின் மரணப்படுக்கையாகவே, அந்தியதேவதிரவியஅநுமானங்களைப்பெற்று அமலன்பதம் அடைந்தார். இது 1742-ம் ஆண்டு ஆடிமாதம் 17-ந்திகதி நடைபெற்றது. பின்னர் 19-ந்திகதிவரை அவரின்திருச்சடலம் பலதிசைகளிலும்இருந்துவந்த விசுவாசிகளின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருந்து பின்னர் பூமதானஞ்செய்யப்பட்டது போளவத்தை ஆலயத்திற்றான்.

நிற்க, 1746-ம்ஆண்டு இத்தேவாலயம் கண்டிவேதவிரோதிகளினால் சுட்டெரிக்கப்படவே, பிந்த 1766-ம் ஆண்டு அதேயிடத்திற்றானே கட்டப்பட்ட புதியஆலயமும் காலஞ்செல்லச்செல்ல அழிந்தொழியும்நிலைமைக்குள்ளாக, எமதுகண்ணியத்துக்குரியவரும், இன்றைக்குமே சகலராலும், நினைவுகூரப்படுகிறவருமான வண. கர்சியாசுவாமிகள் பலவிதஇடுக்கண்கள் மத்தியிலே மனோற்சாகத்துடன் நின்று தற்போதுள்ள ஆலயத்தை 1850-ம்ஆண்டு கட்டிமுடித்தார். அவ்வாண்டுஇது பெற்றக்கினிஆண்டவரின் நிவாசமுமாயிற்று. இங்குதங்கியிருக்கும்போது இவர்மரிக்கவே, இவரின் திருமேனியும் இவ்வாலயத்திற்றானே சேமிக்கப்படலாயிற்று. வண. கர்சியாசுவாமிகளின் திருச்சடலமும் இதிற்றான் சேமிக்கப்பட்டுள்ளது. 19-ம்நூற்றாண்டின் முற்பகுதியிலே யாழ்ப்பாண மேற்றிராசனத்துடனும் பிற்பகுதியிலே கொழும்புஅதிமேற்றிராசனத்துடனும் சேர்க்கப்பட்டிருந்த போளவத்தை 1940-ம்ஆண்டு புதிதாக வகுக்கப்பட்ட சலாபமேற்றிராசனத்துடன் சேர்க்கப்பட்டது.

தற்போது போளவத்தைக் கட்டளைக்குரவராய் இருந்துவருகின்ற அதிவண. சுவாமியவர்கள் தீவிரமுயற்சியெடுத்து, யாவரையும் உற்சாகப்படுத்தியும், மற்றவர்களோடு தாமும்ஒருவராய்நின்று பணிஆற்றியும், ஆற்றுவித்தும் பழமையுற்றிருந்த எமதுஆலயத்தைத்திருத்திப் புதுப்பித்து இஃது ஓர் புதியஆலயமாகக் காட்சியளிக்கும்படி செய்திருக்கின்றார். அதனால் இதன் நூற்றாண்டுவிழாவைக் கண்டுகளிக்கச்செய்தமுதற்பெருமை அவர்க்கே உரியதாகும். இவ்விழாவைச் சிறப்பாகக்கொண்டாடுமுகமாகச் சென்றஆடிமாசம் 7-ந்திகதிமுதல் 12-ந்திகதிவரை சிங்களப்பகுதியாருக்கு ஓர்ஞானவொடுக்கம் போதிக்கப்பட்டது. தமிழ்ப்பகுதியாருக்கு இந்த ஆவணிமாதம் 5-ந்திகதிமுதல் ஓர் ஞானவொடுக்கம் போதிக்கப்பட்டுவருகிறது. அன்றியும் மாதாவுக்கு முடிசூட்டும் திருவைபவத்திற்கு தேவபாலனை நாடிவந்த மூவிராசாக்கள் போலக் கொழும்பு அதிமேற்றிராணியாரும், கண்டி, சலாபமேற்றிராணிமார்களும் சமுகமளிக்கவிருக்கின்றார்கள். விழாநிகழ்ச்சிகள் வருமாறு:—

13-ந்திகதி—அதிமேற்றிராணியாருக்கும், மேற்றிராணிமாருக்கும் வரவேற்பு

14-ந்திகதி—பலிபீட திருஅபிஷேக வைபவம்.

15-ந்திகதி—மாதாவின் மோட்சாரோபணத்திருநாள்.

16-ந்திகதி—உறுதிப்பூசுதல்

17-ந்திகதி—மாதாவுக்கு முடிசூட்டும் திருவைபவம்.

18-ந்திகதி—வேஸ்பர்.

19-ந்திகதி—நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டம்.

### அரிசி, மா, சீனிவிலை

இன்னும் பன்னிருமாச காலத்திற்குக் கூப்பன்அரிசி படிஒன்று 25 சதவீதமும், மேலதிக அரிசி படிஒன்று 68 சதவீதமும், கோதுமைமா றாத்தல் ஒன்று 23 சதவீதமும், சீனி றாத்தல் ஒன்று 48 சதவீதமும் விற்றுவருவதற்கான ஒழுங்குகளை அரசினர் செய்துவருவதாக உள்நாட்டுமந்திரியார் சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## கைதிகளை மீட்கும் முயற்சி

— நியூயோக்

கம்யூனிஸ்தஆதிக்கத்திலுள்ள நாடுகளில் மறைந்துபோன, 2-வது மகாயுத்தக்கைதிகளை மீட்பது குறித்து, மூவரைக்கொண்ட புதியதொரு ஐ. நா. கம்மிஷன் தற்போது நடவடிக்கை எடுத்துவருகிறது. புதியகம்மிஷனின் முதற்கூட்டத்திலே சர்வதேச நீதிமன்ற உப அக்கிராசனர் நீதிபதி ஹோஸே மேகறேரா (சல்வடோரைச் சேர்ந்தவர்) கம்மிஷன் அக்கிராசனராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். போக் பெர்னதொத் சீமாட்டியும், பர்மிய உயர்நீதிமன்ற நீதிபதி ஆங்கைன் அவர்களும் கம்மிஷனின் மற்றிரு அங்கத்தினராவர். யுத்தகைதிகளின் இருப்பிடத்தை நிச்சயமாகக் கண்டறியவும், மறைந்த யுத்தகைதிகளை மீண்டும் கண்டுகளிக்கவும் காத்திருக்கும் உற்றார்உறவினரை மட்டுமன்றி, யுத்தம்முடிந்ததும் யுத்தகைதிகளை விரைவில் அவரவர் தாயகம்சேர்க்க வேண்டும் என்ற சர்வதேசநெறியை நம்புவோரும் இந்தக்கம்மிஷனின் பரிசீலனையை ஆர்வமுடன் கவனித்துவருவர்என்கிறார் ஐ. நா. பிரதமகாரியதரிசி ஸ்ரீ டிரிக்வீ லீ அவர்கள். யுத்தகைதிகள்குறித்து ஐ. நா. கேள்விப்பத்திரத்திற்கு 45 தேசங்கள் தந்துள்ள மறுமொழியைக் கம்மிஷன் அந்தரங்கமாக ஆராய்ந்துவருகின்றது. யப்பான் அனுப்பியுள்ள பதிலில், இன்னும் காணுமலிருக்கிற 3,70,000 யப்பானியர்கள் என்னவாயினர்என்று சோவியற்அரசினிடமும், செஞ்சீனுவிடமும், வடகோறியாவிடமும் விவரம் கேட்டிருக்கிறது. சுமார் 4,00.000 ஜேர்மன் யுத்தகைதிகளையும், 63,000 இத்தாலிய யுத்தகைதிகளையும், 1,970 லக்ஸம்பேர்க்கரையும் காணவில்லைஎனவும் இதற்குப் பதில் சொல்லும் பொறுப்புக் கம்யூனிஸ்தநாடுகளுடையது எனவும் கம்மிஷனுக்குத் தகவல் கிடைத்துள்ளது. 1950-ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ந்திகதி கம்மிஷன் தோன்றிய போது நடந்தவிவாதத்திலே, "எல்லா யுத்தகைதிகளையும் எவ்வளவோகாலத்திற்குமுந்தியே திருப்பி அனுப்பிவிட்டோம்"எனச் சோவியற்அரசு பதில் சொல்லிற்று.

## ஒப்பிடப்படுகின்றன

— கமில்ரன், நியூயோக்

முன்னாட்களிலே குடியேற்ற நாடுகளாயிருந்து தற்போது சுதந்திரமாகத் திகழும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ்முதலான நாடுகளுக்கும், சோவியற்தலையாட்டிகளான ரூமேனியா, பல்கேரியா, போலாந்து, செக்கோசிலவாகியாமுதலான நாடுகளுக்குமிடையே காணப்படும்வேறுபாடுகளை இங்கு கால்கேற் பல்கலைக்கழகக்கூட்டமொன்றில் அ. ஐ. தேச விசேடஸ்தானிகர் பிலிப் ஸி. ஜெசப் அவர்கள் விளக்கிக்கூறினார். அவர் கூறியதாவது: "அமெரிக்கா தனதுவாக்குறுதிப்படி பிலிப்பைன்ஸுக்குச் சுதந்திரம்கொடுத்தது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் சுதந்திரமடைந்தன. இவைகள் பிரித்தானியுடனும், ஏனைய சாம்பிராச்சியநாடுகளுடனும் இணைந்துவாழ்கின்றன. பர்மா சுதந்திரமாயிருக்கிறது. இந்தோனேஷியா தன்னரசுபெற்று, நெதர்லண்ட்ஸ்-இந்தோனேஷியா ஐக்கியத்துடன் இணைந்துள்ளது. பிரான்சியஐக்கியத்துடன்பொருந்தி வியற்னும், லாவோஸ், கம்போடியஇராச்சியங்கள் குடியேற்ற நாட்டுத் தளையினின்றும் விடுபட்டுள்ளன. ஐ. நா. சகாயத்துடன் கோறிய குடியரசு சுதந்திர உறுப்பாகத் தோற்றுவிக்கப்பட்டது."

இவற்றிற்குஎதிராகச் சோவியற்அரசின் 'பேரேட்டில்' என்ன பார்க்கிறோம்? ஜெசப் பின்வருமாறு விளக்கினார்: லாத்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா ஆகியநாடுகளின் தேசிய எல்லைகளைச் சோவியற்அரசு அழித்துவிட்டு அவற்றைத் தன்வசப்படுத்திக்கொண்டது. இந்த நாடுகளிலிருந்த சனங்களில் முக்கால்வாசிப்பேர் கட்டாயத் தொழில்முகாம்களுக்கு அகற்றப்பட்டனர். ரூமேனியாவும், பல்கேரியாவும் பொம்மைகள். சுதந்திரதாகத்துடன் இயங்கிய போலாந்துகூட ரூஷியாவினுல் அடிமைகொள்ளப்பட்டிருக்கிறது. செம்படைத் தளபதி ஒருவர் போலாந்தின் தற்காப்புமந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார். எல்லையிலே செம்படையை நிறுத்திக்கொண்டு செக்கோசிலவாகியாவைச் சோவியற்அரசு கொள்ளைகொண்டது. ஹங்கேரியும் இதேகதியில் அதோகதியாகிவிட்டது. கிழக்குஜேர்மனியில் ஜனநாயகவிடுதலை நசுங்குண்டுகிடக்கிறது. தூரகிழக்கிலே, ஸாரின் ஏகாதிபத்தியவெறியையும் மிஞ்சியவகையில் ரூஷியா காரியங்கள் செய்துகொண்டு போகிறது. மங்கோலியாவைச் சீனக்குடியரசுடன் இணைந்ததாய்க் கருதுவதாகச் சொல்லிவிட்டு, இப்போது சோவியற்அரசு சொல்மாறிநடக்கிறது. சிங்கியாங்கில் மஸ்கோவின்பிடி இறுகியிருக்கிறது. இந்த விடுதலையிழந்த நாடுகளைத்தான் "மக்கள்ஜனநாயகம்" என்று மஸ்கோ மாய்மாலம்செய்கிறது.

## சமயோசித எச்சரிக்கை

— வாஷிங்ரன்

டெட்ரோயிட்நகரிலே ஜனதிபதி ட்றூமன் பேருரைநிகழ்த்திபோது, "கோறியாவில் என்ன நடந்தாலும் நமது தற்காப்புப்பலத்தை நாம் பெருக்கிக்கொள்வதானது, கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு அத்தியாவசியமாகும்" எனச் சொன்னது, தருணம்பார்த்து விடுத்த ஓர் எச்சரிக்கையாகும்என்று அமெரிக்க பத்திரிகைகள் அபிப்பிராயம் எழுதியுள்ளன.

"வாஷிங்ரன் போஸ்ற்" எழுதுவதாவது: ரூமேனியா, ஹங்கேரி, பல்கேரியாமுதலிய சார்புநாடுகளிலெல்லாம் சோவியற்அரசு போர்க்கோல ஆயத்தங்களை முடுக்கிவிட்டுள்ளது. சீன, கோறிய கம்யூனிஸ்தபட்டாளங்களுக்கு ரூஷியசாதனம் குவியலாகச் சேர்ந்துகொண்டேயிருக்கின்றது. சோவியற்அரசின் சொந்தஇராணுவ பலமும் பெருகிக்கொண்டிருக்கிறது. இந்நிலைமையிலே, கோறியாவில் யாதுநடப்பினும் நாம் எச்சரிக்கையை இழக்கக்கூடாதென ஜனதிபதி ட்றூமன் சரியாகவேவற்புறுத்தியிருக்கிறார்.

பல்கேரியா, ஹங்கேரி, ரூமேனியா இவைகள் 1947-ம் ஆண்டு கையொப்பமிட்ட சமாதான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள வரம்பிற்கு மிகவும் மேலதிகமாகவே தங்கள் இராணுவ பலத்தைப் பெருக்கி வைத்துக்கொண்டிருக்கின்றன. கையொப்பமிட்ட உடன்படிக்கைகளையோ அல்லது கொடுத்த வாக்குறுதிகளையோ அவர்கள் மதிப்பதேகிடையாது எனச் சொன்னார் ஜனதிபதி ட்றூமன்.

"நியூயோக் ரைம்ஸ்" எழுதுவதாவது: இந்தச்சமயத்தில் அமெரிக்கர் மூன்று விஷயங்களை ஞாபகத்தில் இருத்தவேண்டும்என்பதை ஜனதிபதி தமது டெட்ரோயிட்நகர சொற்பொழிவில் விளக்கிக் காட்டினார். நமது கொள்கை சரியானகொள்கை என ட்றூமன்சொல்வது, சண்டையைத் தூண்டாமலும், அதேசமயம் சோவியற்ஏகாதிபத்தியத்திற்கு ஏதேனும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# பொதுவர்த்தமானம்

## தென்கோறிய தலைநகரம்

ஓர்ஆண்டுகாலயுத்தத்திலே நான்குமுறை வீழ்ச்சியடைந்த தென்கோறிய தலைப்பட்டணமாகிய சவூல் நகரம் இன்று பாழடைந்து பரிதாபநிலைமையில் இருந்துவருகிறது. யுத்தத்துக்குமுன் பத்துலட்சம் குடிசனங்களைக் கொண்டிருந்த அந்நகரில் இன்று இரண்டுலட்சம்பேர்வரையில்தான் தங்கியிருக்கின்றனர். இவர்களும் சன்னல்கள்உடைந்து சுவர்கள்விழுந்து கேவலநிலையில்கிடக்கும் வீடுகளிலே பெருங்கஷ்டவாழ்க்கை நடத்திவருகின்றனர். இவர்கள் தங்களிடமுள்ள எளியசாமான்களை விற்றுச் சீவனத்துக்குச் சிறுதொகைப்பணம் பெறுவதென்றால், அதுவும் பெரிய கஷ்டமாய் இருக்கிறது. வீதிகளின் பக்கமாகவுள்ள கால்நடைப்பாதைகளில்தான் கடைகள்இருந்துவருகின்றன. அதிகமான சனங்கள் கஷ்டநிவாரண உதவிகள்பெற்றே உயிர்வாழ்கின்றார்கள்.

## வலசைவாங்கிய அகதிகள்

சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலிருந்து கொடுமைகளுக்காற்றாது வலசைவாங்கியவர்களாய் மேற்குஜேர்மனியில் இன்று 1 கோடியே 30 லட்சம் அகதிகள் இருக்கின்றார்கள். இவர்களில்அதிகமானோர் கூடாரங்களிலும், குடில்களிலும், நிலவறைகளிலும், இடிகரையான மனைகளிலும் சஞ்சரித்துவருகின்றனர். 1945-ம்ஆண்டுமுதல் இரும்புத்திரைநாடுகளிலிருந்துஅநேக லட்சக்கணக்கான ஆடவர்கள் தப்பியோடியிருக்கின்றனர். தினமும் 800 முதல் 1000 சனங்கள்வரையில் மேற்குஜேர்மனியுள் சென்றுகொண்டிருப்பதாலே இத்தொகை மேலும் அதிகமாகின்றது. நல்லகாலம் எப்போதுவருமென்று இவர்கள் எதிர்பார்த்தபடியே இருக்கின்றார்கள்.

## அடிமைத் தொழிலாளர்

சோவியற்ரூஷியாவிலுள்ள 175 முகாங்களில் 1 கோடியே 40 லட்சம் அடிமைத்தொழிலாளிகள் இருந்துவருவதாகத் தென்மார்க்குதேச தொழிற்சம்மேளத்தின் தலைவரான திரு. எய்லர் ஜென்சன் கூறுகின்றார். இதனை அத்தாட்சிப்படுத்தும் சாசனங்களையும், படங்களையும் இவர்வைத்திருக்கின்றார். "ஸ்கான்டிநேவியா முழுவதிலுமுள்ளவர்களைக்காட்டிலும் அதிகமான அடிமைத்தொழிலாளிகள் இன்று கிழக்குஐரோப்பாவில் இருக்கிறார்கள்என்பதை நாம் அறிவோம். அலஸ்காவிலிருந்து பேரிங்தொடுவாய்க்கூடாக இருக்கின்ற கம்சற்காவிலிருந்து நேரேரூஷியாவின் ஐரோப்பிய மேற்கெல்லைவரையில் முகாங்களுடன்கூடிய விஸ்தாரமான சோவியற்நாட்டின் படம்ஒன்று என்னிடம்இருக்கின்றது. அதிலே 175 முகாங்கள் இருக்கின்றன"வென்று இவர் கூறுகின்றார்.

## மலேரியாப் புதியமருந்து

உலகில் மிகஅதிகமாகப் பரந்துகொண்டுவரும் பெரியதொற்றுநோய் ஆகிய மலேரியாவராமல் பாதுகாத்துவைக்கும்பொருட்டுக் கோறியயுத்தத்தில்ஈடுபட்டிருக்கின்றஐக்கியநாடுகளின் போர்வீரர்கள் ஒவ்வொருவருக்கும் வாரந்தோறும் ஓர்கிறிய வெள்ளைக் குளிகை கொடுக்கப்பட்டுவருகிறது. அமெரிக்க ஐக்கியதேசத்திலே கண்டுபிடித்துத் தயாரிக்கப்பட்ட இம்மருந்து 'குளோரோக்குயின்'என அறியப்படுகிறது. இரண்டாவதுஉலகயுத்தம் நடந்தகாலத்திலே மலேரியாவுக்கென்று கண்டுபிடித்துத் தயாரிக்கப்பட்ட மருந்துகளுள் இது அதிகம் சித்திகாமானதென்று அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது. கடந்தசிலவருடங்களிலே இது யாவாவில் பிள்ளைகள் மத்தியிலும், பனமாவிலும், பெல்ஜிய கொங்கோவிலுமுள்ள சனங்கள்மத்தியிலும் மலேரியாவராமல் தடுத்துவைத்திருக்கிறது. 0 5 கிறேய்ன்நிறையுள்ள சிறிய குளிகை ஒன்று ஒரு வாரத்துக்கு மலேரியாவராமல் தடுக்கக்கூடிய சக்திவாய்ந்தது.

## பிரியாவிடை விழா

இம்மதி 4-ந்திகதி சனிவாரம் அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டமண்டபம் பலவர்ணத்துவசங்களாலும், மின்சாரதீபங்களாலும் அழகேமயமாய் விளங்கியது. அன்று பிற்பகல் 5 மணியளவில் கூட்டஅங்கத்தவர்கள் தங்கள் பழையதலைவர் வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்களைக் கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிருந்து ஆனந்தஆர்ப்பரிப்புகளுடன் தங்கல் மண்டபத்திற்குஅழைத்துச்செல்லவே—அதன்வாயிலில் அவர் மாலைசூட்டப்பெற்றுஉட்பிரவேசித்து இருகுரவர்களை இருமருங்குமாகக்கொண்டு நடுநாயகமாக உயர்மேடையில் அமர்ந்தனர். பின்னர் அங்கத்தவர் ஒருவரால் பிரியாவிடைப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. வண. பி. நிக்கலஸ் சுவாமியவர்களாலும், கூட்டத்தின் தற்போதையதலைவரான வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்களாலும், அங்கத்தவர்களில் ஒருவரான எவ். ஜி. வேதநாயகம் என்பவராலும் குரவரின் குணதிசயங்கள்பற்றியும், அவர் கூட்டத்துக்கு ஆற்றியுள்ள சேவைகள்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. ஈற்றில் விழாநாயகரின் குறிப்புரையோடும, சிற்றுண்டிஉபசாரணையோடும் பிரியாவிடைவிழா இனிதே பூர்த்தியாயிற்று.

ஓர் அங்கத்தவன்

## கொழும்புத் தமிழ்ப்பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி

இப்போட்டி 28-7-51 சனிவாரம் பொறளையிலுள்ள கம்பல் மைதானத்தில் சிறப்பாகநடைபெற்றது. 18 பாடசாலைகள் இதிற் கலந்துகொண்டன. பகுதி வித்தியாதரிசி திரு. ஆர். திருநாவுக்கரசுஅவர்கள் தலைமைவகித்தனர். ஸ்ரீமதி கே. எம். ஜே. பெர்னண்டோ, (தேகாப்பியாச வித்தியாதரிசினி) வித்தியாதரிசி திரு. சி. ஏ. ஞானசேகரம், திரு. சபாநாயகம்என்பவர்கள் மத்தியஸ்தர்களாய் இருந்தனர். திரு. க. இராசையா, வ. நடராஜா ஆசிரியர்கள் போட்டிக்காரியதரிசிகளாகக் கடமையாற்றினர். நிர்வாகப்பொறுப்புத் திரு. கே. எஸ். லியோனிஸ் பெர்னண்டோ (பொறளைப்பாடசாலைத் தலைமையாசிரியர்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. தங்கள்பிள்ளைகளின் முன்னேற்றங் கருதிப் பாடசாலைகள்பல அநேகவெகுமதிகளை அளித்தன. கொழும்புப் பிரபல புத்தகவியாபாரிகளான திரு. இரத்தினம், மந்திரி கிறகோரி, அன்சாரி என்பவர்கள் நன்கொடைகள் வழங்கியிருந்தார்கள். கூடியபுள்ளிகளைப்பெற்று முதலிடம் வகித்த பொறளைக் கத்தோலிக்கதமிழ்ப் பாடசாலைக்குத் தேகாப்பியாச வித்தியாதரிசினியால் அளிக்கப்பட்ட வெள்ளிக்கிண்ணமும், இரண்டாவது இடம்வகித்த கொள்ளுப்பிட்டிக் கன்னிகாமடத்துப் பாடசாலைக்கு அடுத்த பரிசிலும், மூன்றாவது இடம்வகித்த அர்ச். லூசியா கத்தோலிக்க பாடசாலைக்கு அடுத்தபரிசிலும் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டன. கடந்த 15 வருடங்களிலும் இவ்விளையாட்டுப் போட்டி வருடந்தோறும் முன்னேற்றமடைந்துகொண்டு வருவதைக்காணும்போது தமிழ்ப்பாடசாலைகளின் பண்பாடுகளும் உயர்ந்துகொண்டு வந்திருக்கின்றனவென்பதை எவருமே ஒப்புக்கொள்வர் அன்றோ!

—K. S. L.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தூது

தமிழ்இலக்கியக் கழகத்தலைவர் அறிஞர் தனிநாயகஅடிகள், *M. A., M. Litt., S. T. D*

(முன்தொடர்ச்சி)

ஹாவாய்த்தீவுகளை ஐக்கிய அமெரிக்காவின் வாயில்என்று கூறுவர். இத்தீவுகளிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் மேற்குக்கரை இரண்டாயிரம்கல் தொலைவிலிருக்கின்றது. எனினும், ஹாவாய்த்தீவினர் அதனை அக்கரை (Mainland) என்று அழைக்கின்றனர். நண்பகலில் வானூர்தி ஏறினால் அன்றுமாலை சன்பிரான்சிஸ்கோ எனும் பேரூர்க்குப் போய்ச்சேரலாம். ஐக்கிய அமெரிக்காவிலிருப்பவர் பிறநாடுகளைப்பற்றியும், பிறமக்களைப்பற்றியும், பிறஇலக்கியங்களைப்பற்றியும் அறிய அவாஉடையவர். அவர்களுடைய பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், கூட்டங்களிலும், வேற்றுநாட்டுச் சொற்பொழிவாளரை அழைப்பது பெருவழக்கமாம். சொற்பொழிவுகள் கேட்பதிலும், விருந்துகளுடன் கூட்டங்களைக் கூட்டுவதிலும், விருந்தோடு விரிவுரைகள் நிகழ்த்துவதிலும் ஐக்கிய அமெரிக்கா பிறநாடுகளைவிடத் தேர்ச்சிபெற்றது. ஆதலால் ஐக்கிய அமெரிக்காவில் ஓராண்டில் யான் தமிழைப்பற்றி இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியது பெரும்வியப்பன்று. பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் கிழமைக்கு ஒருமுறை மாணவர் பொதுக்கூட்டம் (Convocation) கூட்டி ஆசிரியரையும் பேரறிஞரையும் வரவழைத்து விரிவுரைகள் நிகழ்த்துவிப்பர். அங்ஙனம் அழைக்கப்படுபவர்க்கு இருநூறு அல்லது மூந்நூறு வெண்பொற்காசுகளைச் சம்பளமாகக் கொடுப்பர். அங்குச் சொல்வன்மையுடையவர் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலேயே தம்வாழ்நாட்களைக் கடத்தலாம். இப்பல்வேறு கழகங்களுக்குச் சொற்பொழிவாளரை அனுப்ப இதற்கென வணிகக் குழுக்கள் (Agencies) இருக்கின்றன.

இனி, தமிழ்த்தொண்டாற்றுதற்கு அமெரிக்க வானொலி நிலையங்களும் எனக்குப் பெருந்துணையாக இருந்தன. ஒவ்வொரு பெரியநகரிலும் இரண்டு மூன்று வானொலி நிலையங்கள் உண்டு. அங்கு என்னை அழைத்துப் பேட்டிவழியாகப் பத்துப்பதினைந்து விநாடிகள் என்னைப்பற்றியும், தமிழ்நாட்டைப்பற்றியும், தமிழ்க்கலைகளைப்பற்றியும் இந்திய அரசியலமைப்பைப்பற்றியும் வினவினர். ஒளிக்காட்சி (Television) வழியாகவும் என்னை மக்களுக்குக்காட்டினர். அயலாரொருவர் ஓர் ஊருக்குச்சென்றால் அவ்வூர்ச் செய்தித்தாள் நிருபர் அவரைத்தேடிப்பிடித்துத் தம் செய்தித்தாளுக்கு வேண்டிய பொருள் பற்றிக்கேட்டெழுதுவதில் மிக்க ஆர்வம் காட்டுவர். இவ்வாறு விரிவுரைவாயிலாகவும், வானொலி, செய்தித்தாள் வழியாகவும், தமிழ்த்தூது நிகழ்த்துவது அமெரிக்காவில் எளிதாகும்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழைப்பற்றியும், தென்னாட்டைப் பற்றியும் அறிந்தவர்கள் ஒருசிலரே. பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் தமிழ்கற்பிக்கவல்ல ஆசிரியரொருவரைப் பெறமுயன்றனர். ஆயினும் அவர்கள் ஒருவரைக் கிடைக்கப்பெற்றாரோ, பெற்றிலரோ யான் அறியேன். நியூயார்க்கில் இருக்கும் மொழிப்பயிற்சிப்பள்ளிக்கூடத்தில் (Berlitz School of Languages) என்னை ஆசிரியராக இருக்கும்படி கேட்டனர். சில பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து மூன்று திங்கள்களாகப் பாடம்நடத்த அழைத்தனர். எனக்குப் பலஊர்களில் விரிவுரைநிகழ்த்துவதுடன் ஓரிடத்தில் கற்றுக்கொடுப்பது அரிதாதலின் யான் உடன்படவில்லை. கொலம்பியா, ஹார்வார்டு, கலிபோர்னியாபோன்ற பல்கலைக்கழகங்களில் கீழ்த்திசை நாடுகளைப்பற்றி ஆழ்ந்தஆராச்சி நடந்துவருகிறது. ஆயினும் தமிழைப்பற்றிய ஆராய்ச்சி மிகக்குறைவேயாம். ஸ்டான்போர்டு (Stanford) பல்கலைக் கழகத்தில் இந்தியக்கலைகளைப்பற்றி விரிவுரை நிகழ்த்தும் ஆசிரியரொருவர்க்கு P. T. ஸ்ரீநிவாச ஐயங்கார் ஆங்கிலத்தில்எழுதிய தமிழாவரலாற்றைக் கொடுத்தேன். அவர் அந்நூல் தமக்குப் புதியதோர் உலகைக்காட்டியதாகப் பேருவகையுடன் கூறினர். மொழிநூலைக்கற்ற சிலர் திராவிட மொழிகளின் தனித்தன்மையை ஒருவாறு உணர்ந்திருந்தனர். ஆயினும் இந்தியமொழிகளென்றால் சமஸ்கிருதம் என்றும், இந்தியக்கலைகளென்றால் வடகலைகளென்றும், இந்தியநாடென்றால் சிந்துகங்கைப் பெரும்வெளியென்றும், இந்தியப்பேரூர்களென்றால் பம்பாய், டில்லி, கல்கத்தா என்றும் நினைக்குமளவுக்கு இந்தியாவின் வடபிரிவின் பெருமையே உணர்த்தப்பட்டிருக்கின்றது.

இந்நாடுகளில் யான் ஆற்றிய விரிவுரைகளில் பெரும்பாலும் தமிழைப்பற்றிய சில பொதுக்குறிப்புகளே அமைந்துள்ளன. தமிழைப்பற்றி யாதேனும் அறியார்க்கு ஆராய்ச்சியுரை நிகழ்த்துதற்கு இடமின்று. பல்வேறுகழகங்களிலும் ஊர்களிலும் வெவ்வேறு குழுவினர்க்கு உரைநிகழ்த்தியதால் ஏறக்குறைய நான்கு ஐந்து விரிவுரைகளையும் அதே கருத்துக்களையும் மீண்டும்மீண்டும் கூறவேண்டியதாயிற்று. அமெரிக்கா இற்றைஞான்று தோன்றியநாடு. இன்னும் இளமைநிலையில் இருக்கின்றது. நூறுண்டுகள் இருநூறுண்டுகள் படைத்தஇடங்கள் அல்லது பொருட்களென்றால் அமெரிக்கருக்கு மிகப் பழைய பொருட்களாகவும், இடங்களாகவும் தோன்றுவன. ஆதலால் அவர்கட்குத் தமிழர் பழைமையையும், தமிழரின் பண்டைவணிகத்தையும், யவனஉரோமருடன் தமிழ்நாட்டு நட்பையுங்கூறியபோது பெரிதும்வியப்பு உண்டாயிற்று. அவர்களுட் பெரும்பாலார் இந்திய—இலங்கையின் வறுமையைப்பற்றியும், உடல்நலம்குன்றிய மக்களைப்பற்றியும், நோயுற்றஊர்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தனர். ஆயினும் தமிழ்நாட்டின்கலைகளை, தமிழ் இலக்கியத்தின் நிதிப்பெருக்கை, தமிழ்மொழியின் சிறப்புஇயல்பை, பழந்தமிழ்க்காதற்பாக்களை, பக்திமாலைகளைப்பற்றிக் கேள்விப்பட்டவரல்லர். அவர்கட்குத் தமிழ்இலக்கியத்திலிருந்து யான் மொழிபெயர்ப்புடன்கூறிய சிலபகுதிகள் இவை:

திருக்குறளில், "அகர முதல வெழுத்
தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே
யுலகு."

என்ற குறட்பாவை விவிலியநூலில் வரும் "நானே அகரமாயிருக்கின்றேன்" என்பதனுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்படி கேட்டேன். மேலும் "யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல."

தீயினுட் டெறனீ பூவினு ணற்றநீ
கல்லினுண் மணியுநீ சொல்லினுள்
வாய்மையு நீ"

என்ற பரிபாடற் பகுதிகளை இசையுடன் உரைத்து விளக்கினேன். இனி, தமிழ்மொழியின் வியத்தகும் இயல்புகளையும், தமிழரின் இயற்கைஈடுபாட்டினையும், ஐந்திணை இலக்கணத்தையும், மலர்மாலைகளை நம்முன்னோர் கையாண்ட முறைகளையும் எடுத்துக்கூறினேன். தமிழன்னையின் வடிவழகைப் பற்றி இன்னும் எனக்கு அமெரிக்கர் ஓலைகள்விடுத்துத் தெளிந்துகொள்கின்கின்றனர்.

தமிழைப்பற்றி மேடைஉரைகளை ஆங்கிலத்தில் நடாத்திய எனக்குத் தமிழில் உரையாடுவதற்கோ வாய்ப்புக் கிடைத்ததேஇல்லை. வானொலிப்பேட்டிகளில் யாதேனும் தமிழிற்சொல்லும்படி கேட்டால், பாரதியாரின் "செந்தமிழ்நாடு", "யாமறிந்த மொழிகளிலே" என்றதலைப்புப்பெற்ற செய்யுட்களில் ஒன்றைக்கூறுவேன். பன்முறை பேட்டியின் பதிவை (Recording) நானே தமிழொலி கேட்பதற்காக மீண்டும் ஓர்ந்துகேட்டின்புறுவேன்.

தேநீர்விருந்துகளிலும் பிறநண்பர் கூட்டங்களிலும் என்னைத் தமிழிற் பாடக் கேட்கும்பொழுது தமிழ் இசைப்பயிற்சி மிக்கற்றயான் "தமிழ் மணம் கமழவேண்டும்", "வெண்ணிலாவும் வானும்போலே" என்றபாட்டுக்களைப்பாடுவேன். செந்தமிழ் நாட்டைக் கும்மியாய்ப்பாட மீண்டும் மீண்டும் கேட்பர். நான்பாடக் கைதட்டித் தாளம்போடுவர். தமிழிசை அறியார்மாட்டுத் திடமுடன்பாடுவது எளிதென அனுபவத்தால் அறிந்துள்ளேன். அமெரிக்காவில் யான்கண்ட தமிழர் ஒருசிலரே. ஆயினும் யான் அமெரிக்காவில்கண்ட தமிழ்ப்பற்றுடைய தமிழர்களுள் நூற்கூடஇயக்கத்தின் தலைவராகிய திருவாளர் அரங்கநாதனும், தமிழிற் பலபுத்தகங்கள் இயற்றிய ருக்மணி அம்மையாரும் குறிப்பிடத்தக்கவராவர். இவர் இருவரும் என்னைப்போல் உலகில் தமிழ்த்தூது நிகழ்த்தும் இன்றியமையாத் தன்மையை நன்குணர்ந்தோர். ருக்மணி அம்மையார் இந்தியக்கலைகளைப்பற்றிப் பல அறிவுரைகள் அமெரிக்காவெங்கும் நடாத்திவருகின்றனர்.

(தொடரும்)

## புதிய கருதினல்மார்

அடுத்த கிறிஸ்மஸ் விழாவன்று பாப்பரசர் கூட்டுவாரென எதிர்பார்க்கப்படும் கருதினல்மார் திருச்சங்கத்திலே எல்லாமாக 53 குருசிரேஷ்டர்கள் கருதினல்மார் ஆக்கப் படுவார்களென நம்பப்படுகிறது. ஏனெனில், அவர்கள் பதவிக்குரிய பாரம்பரிய கௌரவத்தையிட்டு, அன்றேல் கத்தோலிக்கஉலகில் அவர்கள் நிலைமை போதியமுக்கியத்துவம் அடைந்திருப்பதையிட்டு அவ்விதம் ஆக்கப்படவிருக்கிறார்கள். இவர்களில் 11 பேர் ஜெனோவா, வெனிஸ், (இத்தாலி) பரீஸ் (பிரான்ஸ்) பேர்லின் (ஜேர்மனி) கிறனடா, ரறகோன (ஸ்பெயின்) ஆர்மா (அயர்லாந்து) சென் லூயிஸ், (அ. ஐ. தே.) குவெபெக், (கனடா) பொகொட்ரா, (கலம்பியா) மெக்சிக்கோ நகர்களின் அதிமேற்றிராணிமார்கள். வேறு 6 பேர், இத்தாலியசாதியினராய் இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கால், பெல்ஜியம், லக்ஸம்பேர்க் நாடுகளில் இருந்துவருகின்ற பாப்பரசின் ஸ்தானீகர்கள். மற்றும் 3 பேர் ரோமாபுரியிலே திருக்கந்தோரின் பிரதம திருச்சங்க ஆலோசகரான மொஞ். அல்பிறெடோ ஒற்ரூலியானி அதிமேற்றிராணியாரும், கீழ்தேச சபைகளின் திருச்சங்க ஆலோசகரான மொஞ். வலேறியோ வலேறி அதிமேற்றிராணியாரும், விசுவாசப்பரப்புதற் திருச்சங்ககாரியதரிசியான செல்சோ கொஸ்ரான்ரினி அதிமேற்றிராணியாருமே. எஞ்சியமூவரும் யேசுசபை, தொமினிக்குவின்சபை, பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்தவர்கள்.


## டயறம்ஸ் மாளிகையில்

### மகத்தான சேலை விற்பனவு

ஆரம்பம் ஆவணி 6-ந் திகதி

சோதிமயமான "கேவா" பெனறிஸ் சேலைகள்
பொன்மய "ரிஸ்யு" புடவைகள்
"சுற்றன் யாறி ஜோஜற்" சேலைகள்
சித்திரவேலைப்பாடமைந்த "கிறேப்" பட்டுப்புடவைகள்
நேர்த்தியான பெங்களூர், மைசூர் சேலைகள்

**எல்லாவற்றுக்கும்**
**விலை குறைக்கப்பட்டிருக்கின்றது.**

விசேஷ வேதுமதி

100 பட்டுச்சேலைகளுக்கு, வழமையான விலையிலும் அரைவாசி குறைக்கப்பட்டிருக்கிறது.

**இனும்! வெகுமதி**

வாங்கும் பெனறிஸ் சேலை ஒவ்வொன்றுக்கும் "சற்றின்" உள்கவுண் ஒன்று இலவசமாகக் கொடுக்கப்படும்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை இழந்துபோகவேண்டாம்.

**டயறம்ஸ்**

சேலைகளுக்குப் பிரக்கியாதி பெற்றவர்கள்

54/60 பெரியதெரு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பப்திஸ்து டிலாசால் அருளப்பர் பிறந்த 300-வது ஆண்டுவிழா

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கல்விக்கு அரும்பெரும் தொண்டாற்றிய இச்சீலபுருடர் 1719-ம்ஆண்டு இறைவனடி சேர்ந்தார். 1900-ம்ஆண்டு13-ம சிங்கராயர்என்ற பாப்பானவர் இவரை ஓர் அர்ச்சியசிஷ்டர் எனப் பிரகடனஞ்செய்து இவரின்புண்ணியவாழ்வை உலகம் எங்கணும்அறியும்படிசெய்தார். சென்றஆண்டு 12-ம்பத்திநாத பாப்பரசர் தமது "புள்" எனப்படும் ஆணைப்பத்திரத்தால் இவரை ஆசிரியர்களுடையவும், ஆசிரிய மாணவர்களுடையவும பாதுகாவலராக நியமித்தருளினர். தங்கள்சபையை நிறுவிய இப்பெரியதொண்டரை மேல்வரிச்சட்டமாகக்கொண்டு கிறிஸ்தியன் சபைத்துறவிகளும் அன்னார்தொடங்கியபணியை இடம், காலம் முதலியவற்றினால் ஏற்படும் மாற்றங்கட்கேற்பத் தம்மைச்சரிப்படுத்திக் கொண்டு செவ்வனேசெய்து வருகிறார்கள். ஆரம்பபாடசாலைகள், மேற்றர பாடசாலைகள் கைத்தொழிற் பாடசாலைகள், அனாதர் சாலைகள், செவிடர்குருடர் பாடசாலைகள், விவசாயப்பாடசாலைகள் ஆகியபலதுறைக் கல்வியிலும் உழைத்துவருகிறார்கள். ஐரோப்பாவில் தற்போது இவர்கள் போர்காரணமாக ஊனம் அடைந்த சிறுவர்கட்கும், சிறைப்பட்ட போர்வீரரின் குழந்தைகட்கும் பாடசாலைகள்திறந்து பணியாற்றிவருகிறார்கள்.

இத்துறவிகள் 1867-ம்ஆண்டு இலங்கைக்குவந்து அர்ச். ஆசீர்வாதப்பர் (சென் பெனடிக்ஸ்) கல்லூரியைக் கையேற்றனர் தற்போது கொழும்பு, சிலாபம், கண்டி ஆகிய மேற்றிராசனங்களில் ஒன்பது கல்லூரிகளை நடத்திவருகிறார்கள். இலங்கையில் எழுபத்தொரு துறவிகள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட எண்ணாயிரம்மாணவர்கள் இவர்கள்நடத்தும் கல்விச்சாலைகளில் கல்விகற்றுவருகிறார்கள். இலங்கை யாபிரிவுக்குச் சங். லூக் கிறகோரிபிறதர் அதிசிரேட்டராக விளங்குகின்றார். இப்பதவியைவகிக்கும் முதற்சுதேசியும் இவரேயாவர். இத்துறவிகள் யாழ்ப்பாண மேற்றிராசனத்திலும் மன்னார் அர்ச். சவேரியார்கல்லூரியை ஏற்று நடத்தப்போகிறார்கள்என அறிகிறோம். இத்துறவிகளிடம் பயின்றமாணவர்கள் பலர் உயர்ந்தபதவிகளை வகித்துவருகிறார்கள்; வந்தார்கள். இலவசமாக இவர்கள் எத்தனையோ மாணவர்களைப்பயிற்றிவந்திருக்கிறார்கள். கல்விஉலகம் அர்ச். டிலாசால் அருளப்பருக்கும், அவரது அருந்தவப் புதல்வர்களான கிறிஸ்தியன்பிறதர்மார்கட்கும் அளப்பரிய கடப்பாடு உடையது.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் அர்ச். யூதாததேயுவிடம் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன்.

வ. அ. கி.

## "பிதாவே இவர்களை..."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யூதர்மீது பாய்ந்தன உணர்ச்சி அம்புகள் என்உள்ளத்திலிருந்து. ஆனால், குமிறிய என்நெஞ்சில் ஓர் வானொலி ஒலித்தது. பிதாவே! இவர்களை மன்னியும்; ஏனெனில், இவர்கள் செய்வது இன்னதென்று அறியார்கள்." திரும்பத்திரும்ப அக்குரல்கேட்டது. அதைக்கேட்டதும்என் மனதில் அருள்ஒளி உதித்தது. உணர்ச்சிவெள்ளம் என்னுள்ளத்தின் கரைகளை உடைத்துக்கொண்டு பாய்ந்தது. அறிந்தேன் என் அறியாமையை. கண்டேன் கடவுளின் கரைகாணக் கருணையை. நாஸ்திகரை உடனே நாசஞ்செய்யாத இரகசியம் உணர்ந்தேன். தம்மைச்சிலுவையில் தொங்கவிட்ட தீயோரைமன்னிக்கப் பிதாவை மன்றாடியதேவன் தம்மைப் பழிப்போரையும் மனமுவந்து மன்னிக்கின்றார் என்று தெரிந்தேன்.

அந்நேரம் அருகிலிருந்த மணவீட்டிலிருந்துவந்துகொண்டிருந்த ஒலிபெருக்கியின் இன்னிசை என்காதில் விழுந்தது. 'பக்திமுக்கியம் அந்தக்காலம்; படிப்புமுக்கியம் இந்தக்காலம்" என்று பாடியது அந்த ஒன்றுமறியா ஒலிபெருக்கி. ஆனால், அதைக்கேட்டதும் இப்போது என் உள்ளத்தில் கோபம் எழவில்லை. "பிதாவே இவர்களை மன்னியும்" என்று கூறிக்கொண்டே வெளிகொண்டேன். அப்போது, கிறீஸ்துவ கம்பர் என்று புகழப்படும் கிருஷ்ண பிள்ளையின் பாடல்ஒன்று என் நினைவிற்குவந்தது.

"தன்னரிய திருமேனி சதைப்
புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போ
தும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார்
தாம்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனி
வாய் மலர்ந்தார்நம் அருள்
வள்ளல்"

என்ற அந்த அழகான பாடலைப் பாடிக்கொண்டே வழிநடந்து என் இல்லம் ஏகினேன்.

—(ச. போ.)

## அமெரிக்க செய்திகள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவழியில் சரணாகதி அடையாமலும் இருக்கின்ற நடுப்பாதையைத்தான். இன்றைய சோதனையைச் சமாளிக்க நம்மால்முடியும் என்றநம்பிக்கை அவருக்குப் பூரணமாக இருக்கிறது. தமது நம்பிக்கைக்குப் பக்கபலமாக, நாம் பலப்படுத்திக்கொண்டுவரும் தற்காப்பு ஏற்பாடுகளைப் புள்ளிவிபர பூர்வமாக அவர்எடுத்துக்காட்டினார். இவைகள் திருப்தியூட்டும் காரணங்களாகும்.

(யூஸிஸ்)

## சுதேச வர்த்தமானம்

### அரசாங்கஉதவி வேண்டியதில்லை

மொறட்டுவாவிலுள்ள ஸ்ரீலங்கா புத்தசமிதியின் 27-வதுவருடாந்த பொதுக்கூட்டம் சென்ற 31-ந்திகதி அங்குள்ள புத்தமண்டபத்தில் நடந்தேறியது. அதற்குத் திரு. தோமஸ அமரசூரிய அவர்கள் தலைமைவகித்துப்

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } No. 1323

In the matter of the Last Will and Testament of the late Sinnakuddy, widow of Kasinather Murugesu of Karainagar West, Karainagar

Deceased

Murugesu Sangarapillai of Karainagar West, Karainagar
Attorney of Murugesu Thambiah of Karainagar West
Karainagar, presently of Kuala Pilah, Malaya.

Petitioner

This matter coming on for disposal before V. S. Jayawickreme, Esquire, District Judge of Jaffna, on the 4-th day of June, 1951, in the presence of Mr. V. K. Rudrasingham, Proctor, on the part of the Petitioner abovenamed and the affidavit of the Petitioner abovenamed dated the 4th day of June, 1951, the affidavit of the attesting witnesses dated the 23rd day of May, 1951, and the affidavit of the Notary dated the 29th day of May, 1951, having been read:

It is ordered that the Last Will and Testament No. 514 made by the deceased abovenamed and attested by Mr. S. Candiah, Notary Public on the 17th day of December, 1948, the original of which has been produced and now deposited in this Court be and the same is hereby declared proved; and that Murugesu Thambiah of Karainagar West, Karainagar, presently of Kuala Pilah, Malaya, is the Executor named therein and the Petitioner abovenamed is hereby declared entitled as the duly appointed Attorney of the Executor to have Letters of Administration with the Will annexed issued to him accordingly, unless any other person or persons interested shall, on or before the 16th day of July, 1951, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 25th day of June, 1951.

(Sgd.) V. S. JAYAWICKREME,
District Judge.

Extended and re-issued for showing cause till September 10, 1951.

(Sgd.) V. S. JAYAWICKREME,
District Judge.

## LOCAL GOVERNMENT SERVICE

**Post of Revenue Overseer, Grade II, Village Committee, Pandatheruppu (Jaffna District)**

APPLICATIONS are invited for the above post.

2. Salary scale: Rs. 480-20 of 12 —720 per annum,
3. Closing date of Applications: 25th August, 1951.
4. Canvassing either directly or indirectly will be a disqualification.
5. For full particulars see Part IV of the Government Gazette of 10th August, 1951.

**S. Nagamuthu**
Chairman,
Village Committee, Pandatheruppu.

V. C. Office,
Pandatheruppu, August, 2, 1951

பேசியபோது, புத்தர்களாகிய நாம் நமதுசமய நலவுரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்தின்உதவியை நாடவேண்டியதில்லை. இந்நாட்டு அரசியல்வாதிகளிற்சிலர் கோருகிறபடி, புத்தசமயத்தை அரசாங்கசமயமாகச் செய்யவேண்டுமென்று நாம் பிரதமரைக் கேட்டுக்கொள்ள வேண்டியதுமில்லை" எனக்கூறலாயினர்.

### வயோதிகர் சாலைகள்

இலங்கையின் ஒவ்வோர் மாகாணத்திலுமே வயோதிகருக்கும், அசக்தர்களுக்கும் விடுதிச்சாலைகளை அமைப்பதற்கென்று புதியஅரசிறைவருடத்திலே அரசினர் 25 லட்சம் ரூபா செலவிடவிருக்கின்றனர். அதனால் புதியஅரசிறைவருடம் முடிவாகுமுன் ஒவ்வோர் மாகாணத்திலும் குறைந்தபட்சம் ஒவ்வோர் விடுதிச்சாலையாவது அமைக்கப்பட்டிருக்கும். தற்போது கொக்கலையிலிருக்கும் வயோதிகர்சாலை தான் அரசினரால் நடத்தப்பட்டுவருவதாகும். இதிலே 250 வயோதிகர் இருந்துவருகின்றார்கள்.

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

புதியதோர் அரசியற்கட்சியைஆக்கும் விஷயமாய்க் கலந்து விவாதிக்கும் பொருட்டுச் சென்றவெள்ளிக்கிழமை இரவு மாஜி சுகாதார-தலதாபன மந்திரியாரான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகவின் வாசஸ்தலத்தில் ஓர்கூட்டம் நடந்தேறியது. பாராளுமன்ற அங்கத்தவர்கள் எழுவர் உட்படச் சகலசாதி சமயங்களையுஞ் சேர்ந்த 40 பேர் சமுகமளித்திருந்தனர். புதியஅரசியற்கட்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியென அழைப்பதென்று அக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

போக்குவரத்து

## அறிவித்தல்

### நல்லூர்க் கந்தசுவாமிகோவில் வருடமகோற்சவம்—1951.

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெருவீதிகள் 1951-ம் ஆண்டு ஆவணி மாதம் 8-ந் தேதி தொடக்கம் புரட்டாசி மாதம் 2-ந் தேதி வரை எவ்வகையான வண்டிகளும் கீழ்க்காட்டப்படும் தெருவீதிகளால் போக்குவரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பெருந்தெருவில் ஆனைப்பந்திச்சந்திக்கும் 2-ம் மைல் கல்லுக்குமிடையே உள்ள பாகம்.

(ஆ) பண்டாரக்குளத்து ஒழுங்கைக்கும் பிராமணக்கட்டுக்குள ஒழுங்கைக்கும் இடையேயுள்ளகோயிலின் மேற்குவீதி.

2. சமயோசிதமாக மாற்றப்படும் தெருக்களின் விபரம்.

குறித்தகாலத்திலே வண்டிகள், ரதங்களைச்செலுத்துவோர் கீழேகாட்டப்படும் தெருக்கள்மூலம் செலுத்துவார்களாக.

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய்மார்க்கம் போக்குவரவு செய்வோர் நாவலர்தெருவாலும், நல்லூர்க் குறுக்குத்தெருவாலும் வண்டி, ரதங்களைச் செலுத்துக.

(ஆ) அரசடித்தெருமூலம் கோப்பாய்மார்க்கம்செல்லுவோர் "உவைமன்" தெரு, நாவலர்தெரு, நல்லூர்க்குறுக்குத் தெருமார்க்கமாகச் செலுத்திச்செல்லுக.

3. திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் ரதங்கள் மூலமாகச்செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ்வண்டிகளையும் ரதங்களையும் கொண்டுபோய் நிரலே ஒதுக்கிவிடுதற்கான தானங்கள் மூன்றிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(அ) அரசடித்தெருமூலமாகக் குறித்த கோவிலுக்குச்செல்லும் வண்டிகள் ரதங்கள் வீரமாகாளி அம்மன்கோவில் நிலத்தில் விடப்படலாம்.

(ஆ) தெற்கிலிருந்து கோயிற்தெருவீதியால்வரும்வண்டிகள் கைலாயபிள்ளையார்கோவில் நிலத்தில் விடலாம்.

(இ) கோப்பாய்மார்க்கமாக வரும் வண்டிகள் ரதங்கள் முத்திரைச்சந்தை நிலத்தில் விடலாம்.

A. C. பர்னந்தோ,
வடமாகாண பொலிஸ் தலைவர்.

யாழ்ப்பாணம்
பொலிஸ்தானம்
26-7-51

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 9 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org